Web - www.ithunamthesam.com
Email - ithunamthesam@gmail.com

வாரஇதழ்

# இது நம்தேசம்


'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'


பார்வை-02 யூன், 24.2015 - 01.07.205 வியூகம்-19 பக்கங்கள்-16 விலை-ரூ.25.00





# சூடு பிடிக்கின்றது பாராளுமன்றத் தேர்தல்



# தடை உத்தரவினை மதிக்காத பிக்குவும் படையினரும்



கொக்குளாயில் பௌத்த பிக்கு ஒருவர் தமிழ்மக்களுக்குச் சொந்தமான தனிப்பட்டவர்களின் காணிகளையும், அரச வைத்திய சாலைக்குரிய காணியின் ஒரு பகுதியினையும், சட்டவிரோதமாக ஆக்கிரமித்து விகாரை ஒன்றைக் கட்டும் முயற்சியில் இராணுவத்தின் உதவியுடன் ஈடுபட்டார். இது விடயத்தில் உள்ளூராட்சி சபையின் அனுமதியையும் அவர் பெறவில்லை.

இந்த ஆக்கிரமிப்பினை தமிழ்மக்கள் காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் காணி அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட நடமாடும் சேவையில் தெரிவித்தனர். காணி அமைச்சு விகாரை அமைப்பதற்கான தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலர் இத்தடை உத்தரவினை நேரடியாக சம்பந்தப்பட்ட பிக்குவிடம் சமர்ப்பித்தார். ஆனால் சம்பந்தப்பட்ட பௌத்தபிக்கு இத்தடை உத்தரவைப் பொருட்படுத்தாமல் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுவருகிறார். படையினரே நேரடியாக இக்கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் அதுவும் வடகிழக்கில் ஒரு சிலருக்கு அரசாங்கம் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கின்றதா? என்ற கேள்வியை இச்சம்பவம் எழுப்பியுள்ளது. அரசாங்கத்துடன் கொஞ்சிக்குலாவும் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் இதுபற்றி அரசாங்கத்திடம் கேள்விகள் எதனையும் எழுப்பவில்லை.

# மகிந்தர் ஆட்சியின் போது வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்ட நிதியினை பெற முயற்சி



மைத்திரி அரசாங்கம் மகிந்தரினாலும் அவரது கூட்டாளிகளினாலும் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை மீளப் பெறுவதற்கு கடுமையாக முயற்சிக்கின்றது. அவர்கள் சென்மாட்டின் தீவு, கொங்கொங், நாடு, வீசேல்ஸ் தீவு ஆகிய நாடுகளின் வங்கிகளில் அரசாங்க நிதியைப் பதுக்கி வைத்துள்ளனர். இதைவிட உகண்டா, டுபாய், கென்யா ஆகிய நாடுகளில் பல்வேறு தொழில் முயற்சிகளிலும் அரசாங்கம் பணத்தை முதலிட்டிருக்கின்றது.

இந்த நிதிகளைக் கண்டுபிடிப்பதற்கு இலங்கைக்கு மீளக் கொண்டு வருவதற்கும் அரசாங்கம் அமெரிக்காவையும் இந்தியாவையும் நாடியுள்ளது.

நரேந்திரமோடி இலங்கைக்கு விஜயம் செய்தபோது இவற்றைக் கண்டுபிடிக்கவும் அதற்கேற்றவகையில் இலங்கையில் நிதிப் புலனாய்வுப் பிரிவை உருவாக்கவும் மோடி உதவ வேண்டும் எனக் கேட்டிருந்தார். மோடி இந்தியா முடிந்த வரை உதவிபுரியும் என்க் கூறியிருந்தார்.

இதைவிட அமெரிக்க ராஜாங்க செயலர் ஜோன் ஹெறி இலங்கை வந்த போது வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நிதியைக் கண்டு பிடிப்பதற்கு இலங்கை புலனாய்வுப் பிரிவினருக்கு பயிற்சி வழங்கப்படுமென உறுதியளித்திருந்தார். இந்தப் பயிற்சிக்காக பின்னர் வல்லுனர்களைக் கொண்ட அமெரிக்கக் குழுவும் இலங்கைக்கு வந்து பயிற்சி அளித்திருந்தது.

வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கல், தொழில் முயற்சிகளில் முதலீடு என்பவற்றிற்கு அப்பால் இலங்கையில் சீனா முதலீடு செய்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் லட்சக்கணக்கான தரவுப் பணத்தையும் முன்னாள் ஆட்சியாளர்கள் பெற்றிருக்கின்றனர். குறிப்பாக நுரைச்சோலை அனல் மின்னிலையை உருவாக்கத்தில் மட்டும் சீனாவிடமிருந்து 15 மில்லியன் ரூபா தரவுக் கூலியாகப் பெறப்பட்டிருக்கின்றது. கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டத்திலும் இவ்வாறு பெறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.


உள்நாட்டவர்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களிலேயே ஆட்சியாளர்கள் 10 வீதம் தரவுக் கூலியைப் பெற்றிருந்தனர். பசில் ராஜபக்ஷ "மிஸ்ரர் ரென் பேர்ஷன்" என அழைக்கப்பட்டிருந்தார். உள்நாட்டவர்களிடமே தரவுக் கூலியைப் பெற்றவர்கள் வெளிநாடுகளிடம் பெற்றமையிட்டு ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

இந்த தரவுக் கூலி தொடர்பாகவும் மைத்திரி அரசாங்கம் புலனாய்வை முடுக்கிவிட்டுள்ளது. அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் ஹெறி ஊழல்வாதிகள் தொடர்பாக கடும் நடவடிக்கைகளை எடுக்கத் தயங்க வேண்டாம் எனக் கூறியமையும் அரசாங்கத்தை ஊக்குவித்துள்ளது.

கொழும்பு துறைமுக அபிவிருத்தித் திட்டம் நிறுத்தப்பட்டதை எதிர்த்து சீனா சர்வதேச கூலி நீதிமன்றத்திடம் முறையிடவுள்ளது. தரவுக் கூலி பண விவகாரம் நிரூபிக்கப்பட்டால் சீனாவின் முறைப்பாடு பிரசுரித்து போய்விடும். புலிகளுக்கு எதிராக ஒரு சர்வதேச வலைப்பின்னல் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதேபோல மகிந்தருக்கு எதிராகவும் சர்வதேச வலைப்பின்னல் உருவாக்கப்பட்டுள்ளது.

மகிந்தர் இதிலிருந்து தப்புவாரா?

# மோடி அரசாங்கத்திற்கு தலையிடி கொடுக்கும் அரவிந்த் கெஜ்ரிவால்




டில்லி சட்டசபை தேர்தலில் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையிலான ஆம் ஆத்மிகட்சி பெருவெற்றியீட்டியிருந்தது. மொத்தம் 70 ஆசனங்களில் 67 ஆசனங்களை அக்கட்சி பெற்றிருந்தது. பாரதீய ஜனதா கட்சிக்கு வெறுமனவே 3 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன.

தேர்தல் முடிவடைந்து டில்லி அரசாங்கத்தைப் பொறுப்பேற்றவுடன் ஆரம்பத்தில் கெஜ்ரிவால் மோடி அரசாங்கத்துடன் சுமூகமாகச் செல்வதற்கே விரும்பியிருந்தார். பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் என்போரையும் நல்லெண்ணத்தைக் காண்பிக்கும் வகையில் சந்தித்துப் பேசினார். ஆனால் அந்தத் தேன்நிலவு தற்போது முறிவடைந்துள்ளது. கெஜ்ரிவால் மோடி அரசாங்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கியுள்ளார்.

டில்லிப் பிரதேச அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கத்திற்குரிய அதிகாரங்கள் கிடையாது. ஒரு யூனியன் பிரதேசத்திற்குரிய அதிகாரங்களே உள்ளன. குறிப்பாக பொலிஸ் திணைக்களம், காணித் திணைக்களம், பொதுச் சேவைத் திணைக்களம் என்பன மத்திய அரசின் அதிகாரத்தின் கீழேயே உள்ளது. உள்த்துறை அமைச்சர் ராஜ் நாத்சிங், துணைநிலை ஆளுநர் நஜீப்ஜங் ஊடாக அவற்றை நிர்வகிக்கின்றார். மத்திய அரசாங்கத்திற்கும், டில்லி அரசாங்கத்திற்கும் இடையே நல்லுறவு இருந்தால் டில்லி அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்பவே மத்திய அரசாங்கம் செயற்படுவதுண்டு. இல்லாதபோது தனித்து இயங்குவதுண்டு.

தற்போது உள்த்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தனித்தே இயங்குகின்றார். அவரது அதிகாரியான துணைநிலை ஆளுநர் நஜீப் யங்கெஜ்ரிவால் அரசாங்கத்தை கணக்கெடுப்பதே இல்லை. இதுமத்திய அரசாங்க அதிகாரிகள் நியமனத்தின் போது பெரும் மோதலாக வெடித்தது. மாநிலங்களுக்குரிய இந்திய நிர்வாக சேவை, இந்திய பொலிஸ்சேவை அதிகாரிகளை நியமிப்பதும், இடமாற்றம் செய்வதும் மத்திய அரசாங்கமே. ஆனால் இதன் போது முதலமைச்சரின் சிபார்சினைக் கேட்டு நடப்பதே வழக்கமானதாகும்.

துணைநிலை ஆளுநர் நஜீப் ஜங் முதலமைச்சர் கெஜ்ரிவலை கலந்தாலோசிக்காமலேயே இந்திய நிர்வாகசேவை அதிகாரியான பெண்மணி ஒருவரை டில்லியின் பதில் தலைமைச் செயலாளராக நியமித்தார். கெஜ்ரிவால் தலைமையிலான டில்லி அரசாங்கம் அதே பதவிக்கு இன்னொரு அதிகாரியை நியமித்தது மல்லாமல் அந்தப் பெண் அதிகாரியின் அலுவலகத்தைபூட்டி எதிர்ப்பை வெளிக்காட்டியது. அவ் அதிகாரி ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் மின்சாரக் கம்பனிகளுக்கு நெருக்கமானவர் எனவும் கூறியுள்ளது. அந்தக் கம்பனிகளுக்கு எதிராக டில்லி அரசாங்கம் கணக்காய்விற்கு உத்தரவிட்டிருக்கின்றது.

இதைவிட டில்லிப் பொலீஸ் திணைக்களம், காணித்திணைக்களம் என்பவற்றில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் விசாரணைகளை டில்லி அரசாங்கம் முன்னெடுப்பதையும், மோடியின் மத்திய அரசாங்கம் தடை செய்துள்ளது. இதுவும் கெஜ்ரிவாலுக்குக் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. உண்மையில் டில்லி அரசாங்கத்தின் ஊழல் தடுப்புப்பிரிவிற்கு மோடி அரசாங்கம் அஞ்சுகின்றது.

கெஜ்ரிவால், ஜெயலலிதா, மம்தா பானர்ஜி போல ஒரு போராட்டக்காரன் கதிரை பற்றிய கவலையில்லாமல் மூர்க்கத்தனத்துடன் போராடுபவர். இதுதான் மோடிக்குள்ள ஒரே அச்சம். தற்போது ஏனைய மாநில முதலமைச்சர்களையும் இணைத்துக் கொண்டு கெஜ்ரிவால் போராடத் தொடங்கியுள்ளார்.

மோடி அரசாங்கத்திற்கு சமாதானமாகப் போவதைத் தவிர தற்போதைக்கு வேறுதெரிவுகள் இல்லை.

# வீதிச் சமிக்கையை மீறியவர் சூட்டுக்கொலை

பொலிஸாரின் சமிக்ஞையை மீறி நிறுத்தாமல் சென்ற லொறிமீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவர் கொல் லபட்டுள்ளதாக மஹாஓயா பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் 23.06.2015 செவ்வாய் அதிகாலை 2.10 மணியளவில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங் களின் எல்லையிலுள்ள மஹாஓயா அரந்தலாவையில் இடம்பெற்றுள் ளது.



அம்பாறை மஹாஓயா வீதியில் நள்ளிரவில் பயணித்துக் கொண்டிருந்த லொறியை சோத னைக்காக நிறுத்துமாறு மங் களம் பொலிஸார் சமிக்ஞை செய் துள்ளனர்.

எனினும், பொலிஸாரின் உத்தரவை மீறி லொறி அதி வேகத்துடன் பொலிஸ் சாவ டியைக் கடந்து செல்லவே பொலிஸார் அடுத்ததாக உள்ள அரந்தலாவ பொலிஸ் நிலையத் திற்கு நிறுத்தாமல் சென்ற லொறி குறித்த தகவல் வழங்கியுள்ளனர்.

அரந்தலாவ பொலிஸா ரும் லொறியை நிறுத்துமாறு கூறவே அங்கும் லொறி நிறுத்தப் படவில்லை. உடனடியாக லொறி மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அவ்வேளையும் லொறி நிறுத்தமால் பயணித்துள் ளது.

பின்னர் பொலிஸார் தேடு தல் நடத்திய பொழுது அம்பாறை பொறகொல்ல விகாரைக்கு அரு கில்கைவிடப்பட்டநிலையில் லொறி காணப்பட்டுள்ளது. லொறியில் சடலம் ஒன்றும் கிடந்துள்ளது.

இது முஸ்லிம் நபர் ஒரு வரின் சடலம் என்று அடை யாளம் காணப்பட்டுள்ளது. எனி னும் இறந்தவர் யாரென்ற விவரங் கள் தெரியவரவில்லை. சடலம் தற்போது மஹாஓயா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (WP LH 8878) என்ற இலக்க முடைய லொறியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த லொறியில் சட்ட விரோதமான முறையில் மாடுகள் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸர் சந்தேகிக்கின்றனர்.

எனினும் கைவிடப்பட்டு கிடந்த லொறியில் மாடுகள் எவை யும் மீட்கப்படவில்லை. இச்சம்வம் குறித்து பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

# தென்கிழக்குப் பல்கலையின் உபவேந்தராக பேராசிரியர் எம்.எம்.எம் நாஜீம் நியமனம்




தென்கிழக்கு பல் கலைக்கழகத்தின் 4ஆவது உபவேந்தராக பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜீம்நியமிக்கப் பட்டுள்ளார்.

22-06-2015 அன்று ஜனாதிபதி மைத்ரி பாலசிறி சேனவினால் இந்த நியமனம்வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக கடமையாற்றிய கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயின்பதவிக் காலம் 21-06-2015 ஞாயிற்றுக் கிழமையுடன் நிறைவடைந்தயடுத்து பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடச் சுற்றுச் சூழல்பாதுகாப்புமற்றும் முகாமைத்துவ பேராசிரியரான நாஜீம், சிறந்த கல்விமானும் பல்வேறு உயர் நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்தவருமாவர்.

உபவேந்தர் பதவிக்குகோரப்பட்ட விண்ணப்பத்திற்கு 15 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், 13 பேர் பேரவை முன்பாக தோன்றி தமது திட்டங்களை சமர்ப்பித்திருந்தனர்

இதில் அதிகவாக்குகளைப் பெற்ற பேராசியர் நாஜீம் உட்பட மூவர், பேரவையால் தெரிவுசெய்யப்பட்டு நியமனத்திற்காக ஜனாதி பதியிடம் அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டிஷ் விருதுபெற்ற மட்டு தமிழ் மகன்

மட்டக்களப்பில் பிறந்து பாப்வா நியூகினியில் மருத்துவராகப் பணி யாற்றும்டாக்டர் ஆதித்தன்செல்வ நாதனுக்கு பிரிட்டிஷ் அரசு OBE விருது வழங்கி கௌரவித்துள்ளது.



சிறிய நாடான பாப்வா நியூகினியிலுள்ள மக்களுக்கு சிறப்பான மருத்துவசேவை வழங்கிய தற்காகவே இந்த விருது வழங்கப்படுகிறது.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பாப்வா நியூகினியில் மருத்துவராக பணியாற்றி வரும் அவர், விமானங்களில் பறப்பவர் களின் உடல்நிலை குறித்த சிறப்பு மருத்துவப்படிப்பை மேற் கொண்டுள்ளார்.

## அம்பாறை மக்களை புறக்கணித்த சம்பந்தன்



அம்பாறை மாவட்டத் தில் உள்ள தமிழ் மக்களை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மறந்து செயற்படுவ தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை யின் உறுப்பினர் ரீ.கலையரசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்கள பிக்கு ஒருவர் பாரிய அளவான தமிழ் மக்களின் காணி களை சுவீகரித்துள்ளார்.

அங்குள்ள தொட்டச் சுருங்கிவட்டை மற்றும் மலையடி வட்டை பகுதிகளில் 200 ஏக்கருக் கும் அதிகமான ஏக்கர் காணிகள் அவரால் சுவீகரிக்கப்பட்டுள்ளன.

இந்த காணிகள் பௌத்த விகாரைக்கு மாற்றப்பட்டு சிங்கள குடியேறிகளுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

ஆனால் இதனை விடு வித்துக் கொள்ள சம்பந்தன் எந்த முயற்சிகளையும் மேற் கொள்ள வில்லை என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## திருமலையில் வதைமுகம் அம்பலம்



யுத்த காலத்தில் கொட்டாஞ் சேனை, வெள்ளவத்தை மற்றும் தெஹிவளை ஆகிய பகுதிகளில் மாணவர்கள் கடத்திச்செல்லப்பட்டு, அவர்களின் பெற்றோரிடம் கப்பம் கோரப்பட்டதாக குற்றப் புலனாய் வுத் திணைக்களம் 23.06.2015 கொழும்பு பிரதம நீதவான் நீதி மன்றத்தில் அறிவித்தது.

காணாமற்போன மூன்று மாணவர்களின் பெற்றோர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசார ணையில் சாட்சியமளித்த குற்றப்புலாய்வுத் திணைக்கள தலைமை இன்ஸ்பெக்டர் நிஷாந்த டி சில்வா நீதிமன்றத்தில் இதனைத் தெரி வித்துள்ளார்.

கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலப்பிட்டி முன்னிலையில் இந்த மனுக்கள் மீதான நீதவான் விசாரணை 23.06.2015 இடம்பெற்றது.

கடத்தப்பட்ட மாணவர்கள் கோட்டே சைத்திய வீதியிலுள்ள நிலக்கீழ் முகாமொன்றில் தடுத்துவைக்கப்பட்டு, பெற்றோரிடம் கப்பம் கோரப்பட்டதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமை இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த சம்பவங்கள் குறித்து அப்போதைய கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட அறிந்திருந்தாரா என இதன்போது பிரதம நீத வான் சாட்சியாளரிடம் வினவினார்.


இத்தகைய சம்பவங்கள் தொடர்பில் அவர் அறிந்திராமல் இருக்க முடியாதென பதிலளித்த சாட்சியாளர், கடத்தப்பட்ட சிறுவர்கள் திருகோணமலை முகாமிற்கும் கொண்டுசெல்லப்பட்டிருந்ததாகக் கூறி னார்.

அத்துடன், இந்த சம்பவங்கள் குறித்து தகவல் அறிந்த மேலும் பலரையும் சாட்சியமளிப்பதற்காக அழைக்க முடியும் என குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமை இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன் பிரகாரம், ஏனைய சாட்சியாளர்களை எதிர்வரும் ஜுலை மாதம் 14 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அழைக்கும் பொறுப்பையும் தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஏற்றுக்கொண்டார்.

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மூதூரில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் ஏற்பாட் டில கழகங்களுக்கு இடையி லான கிரிக்கெட் சுற்றுப் போட்டி மூதூர் தங்கநகர் காந்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் 20.06.2015 காலை 8 மணியளவில் ஆரம் பமாகி சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.



மூதூர் சேருநுவர தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் செயற்பாட்டாளர் தங் கேஸ்வரன் தலைமையில் இடம்பெறும்போட்டியில்மூதூர் பகுதிக்கு உள்ளடக்கிய 20 கிரிக் கெட் கழகங்கள் போட்டியிட்டு வருகின்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருகோண மலை மாவட்ட அமைப்பாளர் இ. ஹரிகரனும் சிறப்புவிருந்தின ராக மலைமுரசின் ஆசிரியர் கண்ணன், மூதூர் இந்துக்குரு மார் சங்கத் தலைவர் பாஸ்கரன் குருக்கள் மற்றும் மோகன், குகன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.



# சூடு பிடிக்கின்றது பாராளுமன்றத் தேர்தல்

முத்துக்குமார்

பாராளுமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற இருக்கின்றது. இந்தப் பத்திரிகை வெளிவரும்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதியும் விண்ணப்பிக்கப்படலாம் அடுத்த ஏப்ரல் வரை பாராளுமன்றத்தை கலைக்கத் தேவையில்லை என்றாலும் அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாததினால் கலைப்பதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு தெரிவில்லை.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பான 20 ஆவது யாப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்படும் என முன்னர் கூறப்பட்டிருந்தாலும் அது நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகளும் ஜே.வி.பி.யும் அதனை கடுமையாக எதிர்க்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியும் பெரிதாக விரும்பவில்லை. ஆட்சி மாற்றத்திற்குப் பின்னால் நின்று செயற்பட்ட அமெரிக்கா தலைமையிலான மேற்குலகும் இந்தியா என்பனவும் அதனை விரும்பும் எனக் கூறமுடியாது. பன்மைத்துவ அதிகாரக் கட்டமைப்பைக் குழப்புவதற்கு அவை ஒருபோதும் விரும்பாது.

இதைவிட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது சீனாவின் செல்வாக்கினை இலங்கையிலிருந்து அகற்றும் வரை தேசிய அரசாங்கம் செயற்படுவதையே அவை விரும்புவதால் பன்மைத்துவக் கட்டமைப்பு அழிக்கப்படுவதை ஏற்கப் போவதில்லை. எனவே பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழேயே பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறப் போகின்றது.

வரப்போகும் தேர்தலில் தென்னிலங்கையைப் பொறுத்தவரை 3 அணிகள் போட்டியிடுவது நிச்சயமானது. ஐக்கிய தேசியக் கட்சி அணி, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணி, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்தரணி என்பவையே அவையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அணியுடன் மனோகணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியும், முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட முஸ்லீம் கட்சிகளும் இணைந்து போட்டியிடலாம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எந்த அணியில் போட்டியிடும் எனத் தற்போதைக்கு உறுதியாகக் கூற முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி அணியில் போட்டியிடுவதற்கு அது சகல முயற்சிகளையும் எடுக்கப் பார்க்கும். இறுதி நேரத்தில் ரணிலும் அதற்கு சம்மதிக்கக் கூடும். இந்தியாவும் அதனை சேர்க்குமாறு ரணிலுக்கு அழுத்தம் கொடுக்கலாம். ஐக்கிய தேசியக் கட்சி அணியில் இடம் கிடைக்காவிட்டால் ஆறுமுகம் தொண்டமான், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மைத்திரி அணியிலேயே போட்டியிட முன்வருவார். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மகிந்தரணியில் போட்டியிடுவதை கூடியவரை தவிர்க்கவே பார்ப்பார். ஜே.வி.யினைப் பொறுத்தவரை சங்கடமான நிலைதான் அது தனித்துப் போட்டியிட்டு குறைந்தளவு ஆசனங்களைக் கூடப் பெறுவது கடினம். ஆனால் நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சி அணியிலோ, சுதந்திரக்கட்சி மகிந்தர் அணியிலோ போட்டியிடப் போவதில்லை. மைத்திரி அணியில் போட்டியிடுவதற்கே அதிக வாய்ப்புக்கள் உண்டு. ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்ற சோமவன்ச குழுவினர் மைத்திரி அணியுடன் நெருக்கமாக இருப்பது ஜே.வி.பியினருக்கு சங்கடங்களைக் கொடுக்கலாம். ஹெலஉறுமயவும் சரத்பொன்சேகாவின் கட்சியும் மைத்திரி அணியுடன் இணைந்தே போட்டியிடும்.

டக்ளஸ் தேவானந்தாவிற்கு ஐ.தே. கட்சியுடன் அல்லது மைத்திரி அணியுடன் இணைந்து போட்டியிடுவதிலேயே அதிக விருப்பம் உண்டு. ஆனால் சம்பந்தன் இதனை விரும்பாததனால் அவை இரண்டும் டக்ளஸ் தேவானந்தாவை இணைக்கப் போவதில்லை.தற்போதைக்கு சம்பந்தனின் உறவை முறித்துக் கொள்வதில் ரணிலோ, மைத்திரியோ தயாராகவில்லை. இந்தியாவும் அதனை விரும்பாது.

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மகிந்தர் அணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கே வாய்ப்புக்கள் அதிகம். எனினும் மகிந்தர் அணியுடன் கூட்டு இருந்தாலும் டக்ளஸ் தேவானந்தா தனது சொந்த சின்னமான வீணை சின்னத்தில் போட்டியிடுவதிலேயே அதிக அக்கறை காட்டுவார். அவரை பொறுத்தவரை தற்போதைய காலம் அவருக்கு ஒரு சங்கடமான காலம்தான் வருமான வழிகள் அடைக்கப்பட்டதனால் கட்சி பலத்த நிதி நெருக்கடியிலும் உள்ளது. கட்சியினால் வெளியிடப்படும் தினமுரசுப் பத்திரிகை நிறுத்தப்படலாம் என்றும் செய்திகள் அடிபடுகின்றன.

தெற்கில் மும்முனைப் போட்டியே இடம்பெறப் போகின்றது. மகிந்தர் அணிக்குக் குறைந்தது 50 ஆசனங்கள் கிடைத்தாலும் வெற்றிதான். எதிர்க்கட்சி தலைமைப் பதவி அதனிடமே செல்லும் ஆட்சி அதிகாரம் கிடைக்காவிட்டாலும்தான் அரசியல் வலிமை உடையவராக இருக்க வேண்டும் என்பதில் மகிந்தர் மிகவும் கவனமாக இருக்கின்றார்.

மைத்திரி அரசாங்கம் மகிந்தரின் பரிவாரங்களை ஊழல் விசாரணை என அலைக்கழித்தாலும் வெளிநாட்டு வங்கிகளில் நிதிப்பதுக்கல்கள் என அச்சுறுத்தினாலும் மகிந்தர், மைத்திரி அரசாங்கத்தைப் பலமாக உலுப்பிக் கொண்டே இருக்கின்றார். இந்த உலுப்பல்களைச் சமாளிப்பதற்கு மைத்திரி அரசாங்கம் மட்டுமல்ல அதற்குப் பின்னால் நின்று செயற்படுத்துகின்ற இந்திய - அமெரிக்க கூட்டும்கூட தடுமாறுகிறது. இலங்கைத் தீவினை மையப்படுத்திய வல்லரசுகளின் புவிசார் அரசியல் போட்டி இந்த தடுமாற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.

வடகிழக்கிலும் மும்முனைப் போட்டிதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈழமக்கள் ஜனநாயக்கட்சி என்பவற்றுக்கிடையேதான் இந்தப் போட்டி இடம்பெறப் போகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் விஜயகலாவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையானும் சிறு போட்டியாளர்களாக நிற்கலாம். ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே பெரிய போட்டியாளராக இருக்கப் போவதில்லை.. ஏனைய மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இடையேதான் போட்டி இடம்பெறப் போகிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தத் தடவை வடகிழக்கு முழுவதும் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதுள்ள அதிதிருப்தியினால் இந்தத் தடவை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்க உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலைக் கீழ் இறக்குகின்றது என்பது அவர்களது கருத்தாகும். அதிகாரச் சமநிலை ஒன்றைக் கொண்டு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறிழைப்பதைத் தடுக்க வேண்டும் என நினைப்பவர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக உள்ளனர். வரப்போகும் பாராளுமன்றத் தேர்தல் தென்னிலங்கையில் மட்டுமல்ல வடகிழக்கிலும் பெரும் போட்டியைக் கிழப்பும் ஒரு தேர்தலாக இருக்கும் எனத் திடமாக நம்பலாம்.

**“புலம்பெயர் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதுள்ள அதிதிருப்தியினால் இந்தத் தடவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்க உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலைக் கீழ் இறக்குகின்றது என்பது அவர்களது கருத்தாகும். அதிகாரச் சம நிலை ஒன்றைக் கொண்டு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறிழைப்பதை தடுக்க வேண்டும் என நினைப்பவர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவாக உள்ளனர்.”**

இது நம்தேசம்
தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# விக்னேஸ்வரன் என்ன செய்யப் போகின்றார்?

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் இடையிலான பனிப்போர் உச்சக்கட்டத்தை அடையத் தொடங்கியுள்ளது. தமிழரசுக் கட்சித்தலைவரும் கூட்டமைப்பின் செயலாளருமான மாவை சேனாதிராஜா விக்னேஸ்வரனிடம் அபிவிருத்தி நிதி விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி ஜனாதிபதியிடம் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பாகவும், ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கை தொடர்பாகவும் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியதைத் தொடர்ந்தே பனிப்போர் உச்சத்திற்கு சென்றுள்ளது.

விக்னேஸ்வரன் அக்கடிதத்திற்கு சுரேஸ்பிரேமசந்திரன் அளித்த பதில் அறிக்கை போதுமானது என கூறியிருக்கின்றார். இதே போல ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் தாம் பெற்ற நிதிகளைப்பற்றி வெளிப்படையாகப் பேசவேண்டும் எனவும் கூறியிருக்கின்றார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழமையான வரவு - செலவு திட்டம் மூலம் நிதி ஒதுக்குவது வேறு விடயம். மாகாணசபை ஒன்று செயல்பட்டு வரும் நிலையில் அதனை புறம்தள்ளி விசேட நிதி ஒதுக்கீடு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது தான் இங்கு விவாதப்பொருளாகும் ஏனெனில் இதற்கு பின்னால் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் இருக்கின்றது.

விக்னேஸ்வரன் இன அழிப்பு தீர்மானத்தை வடமாகண சபையில் நிறைவேற்றியமையினாலும், ரணில் விக்கிரமசிங்கவின் நரித்தனமான அரசியலை வெளிக்கொண்டு வந்தமையினாலும் விக்னேஸ்வரன் மீது ரணில் மிகுந்த கடுப்பில் இருக்கின்றார். தனது வடபகுதி விஜயங்களின் போதும் விக்னேஸ்வரனை அவர் கணக்கெடுக்கவில்லை

இதைவிட முக்கியமானது தமிழ் மக்கள் மத்தியில் சுயாதீன அரசியல் அதிகார நிறுவனம் வளர்வதை ஏனைய பேரினவாதிகளைப் போல ரணிலும் அறவே விரும்பாமையேயாகும். இந்த இரண்டினதும் அடிப்படையில் தான் ரணில் வடமாண சபையை புறக்கணித்ததோடு விக்னேஸ்வரனையும் புறக்கணித்தார். மத்திய நிர்வாகம் ஒன்றையும் கிளிநொச்சியில் அமைக்க முற்பட்டார்.

மறுபக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நல்லிணக்கத்தை பேணுமாறும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை கூட்டமைப்புடன் இணைந்து மேற்கொள்ளுமாறும் ஆட்சிமாற்றத்திற்கு பின்னால் நின்று செயல்பட்ட இந்தியாவும், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் ரணில் அரசாங்கத்தை வற்புறுத்துகின்றன.

இந்த நிலையில் கூட்டமைப்பில் ஒரு சாராரை திருப்திபடுத்துவதைத் தவிர ரணிலுக்கு வேறு வழியிருக்கவில்லை. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டமைக்கு இவையே காரணம். இங்கு ரணிலின் சூழ்ச்சிக்குக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உடந்தையாகி இருக்கின்றனர்.

ரணிலின் இந்த முயற்சிகள் தமிழ்த் தேசிய அரசியல் நீக்கத்தின் ஒரு பகுதி வேலைத் திட்டமே. கூட்டமைப்பின் பெரும்பான்மை அதற்கு இரையாகி இருக்கின்றது. இதற்கு காரணம் இந்தியாவின் பணிப்பின் பேரில் ஏற்கனவே கூட்டமைப்பின் தலைமை தமிழ்த்தேசிய அரசியலை கை விட்டமையேயாகும். இவர்கள் எல்லோரும் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம், அனந்தி போன்றவர்களை தங்களின் அரசியலுக்கு இடைஞ்சலாகவே பார்க்கின்றனர்.

இந்த இடத்தில் தான் விக்னேஸ்வரன் ஒரு தீர்க்கமான முடிவினை எடுத்தல் வேண்டும். தமிழத் தேசியக்கூட்டமைப்பின் தலைமை தமிழ்த் தேசிய அரசியலை நகர்த்தும் தகைமையை எப்போதோ இழந்துவிட்டது. அது மாத்திரமல்ல. தமிழ்த்தேசிய அரசியலை கீழிறக்கும் செயற்பாட்டைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கின்றது. இது அனைவருக்கும் தெரிந்த பகிரங்க உண்மை

இந்நிலையில் கூட்டமைப்பின் தலமையை விக்னேஸ்வரன் கைப்பற்றுதல் வேண்டும் அல்லது கூட்டமைப்பில் இருந்து விலகி வெளியே நிற்கும் ஏனைய தமிழ் தேசிய சக்திகளுடன் இணைந்து செயல்பட தயாராகவேண்டும்.

விக்னேஸ்வரன் இந்த முடிவினை எடுக்காவிட்டால் கூட்டமைப்பின் தற்போதைய செயற்பாடுகளுக்கு வெள்ளை பூசசடித்தவராகவே கருதப்படுவார்.

விக்னேஸ்வரன் என்ன செய்யபோகின்றார்?

# லண்டன் மாநாடு
## தமிழ்க்கூட்டமைப்பு - GTF- ஸ்ரீலங்கா
# கூட்டுச்சதி

13.06.2015 அன்று ஊடகவியலாளர் சந்திப்பு

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**



தமிழ் மக்களின் பெயரால் அண்மையில் பிரித்தானியாவில் இரகசிய மாநாடொன்று நடைபெற்றிருந்தது. அதில் தமிழர் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உலகத் தமிழ் பேரவையின் (Global Tamil Forum) னுடைய பிரதிநிதிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள், சுவிஸ் அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சின் முக்கிய பிரதிநிதி, சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட எரிக்சொல்ஹெம் ஆகியோர் இணைந்து பிரித்தானியாவிலும் வேறு சில இடங்களிலும் இரகசியமான சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளனர். ஆனால், இந்த இரகசிய சந்திப்புக்கள் வெளிவந்துவிட்டன. இச் சந்திப்புக்கள் தொடர்பாகவும் 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் தொடர்பாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தும் நோக்கில் இவ் ஊடகவியலாளர் மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளோம்.

புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்புக்கள், தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள், அரசியல் ரீதியாகச் செயற்படுகின்ற அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு இடையில் ஒரு வருடத்திற்கு மேலாகப் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. பேர்ளின் நகரில் சுவிஸ் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 'பேஃ ஹொவ் பௌண்டேசன்' என்ற ஜேர்மனியை தளமாகக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உலகத் தமிழ் பேரவை, சுவிஸ் அரசாங்கம் என்பன இணைந்து ஆரம்பக் கட்ட கூட்டத்தினை நடாத்தியிருந்தன. அவர்களுக்கு இடையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் தாயகத்தில் உள்ள ஏனைய அமைப்புக்களையும், வெளி நாடுகளில் உள்ள ஏனைய பல புலம்பெயர் தமிழ் அமைப்புக்களையும் அம்மாநாட்டில் இணைக்க வேண்டுமேன முடிவெடுத்தனர். அதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாமும், மன்னார் ஆயரின் தலைமையிலான தமிழ் சிவில் சமூகத்தினரும் தாயகத்திலிருந்து கலந்து கொண்டோம். அதே போல புலம்பெயர் அமைப்புக்களின் சார்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அனைத்துலக மக்கள் அவை ஆகிய நான்கு தரப்புகளும் அழைக்கப்பட்டு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. சுமார் ஒரு வருடகாலமாக அப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

**இன்றைக்கு இருக்கக் கூடிய பேரம் பேசும் பலத்தை அழிக்கப் போகிறார்கள். ஆகக் குறைந்த பட்சம் ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்பட்டு எம் மக்கள் நிம்மதியாகத் தமது பிரதேசத்திலேயே வாழ, எமது பிரச்சினைகளை நாமே தீர்க்கக் கூடிய வகையில் ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்பதுதான் எம் நிலைப்பாடு.**

இப்பேச்சுவார்த்தையில் இறுதித் தீர்வு தொடர்பாகவும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை தொடர்பாகவும் ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

அந்த வகையில் ஒரு பொது இணக்கப்பாட்டிற்காக வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டது. ஆனால் அதில் மூன்று முக்கிய விடயங்களுக்கு இன்றுவரை இணக்கம் காணப்படமுடியவில்லை. அவை யாவன,

1. தமிழ்த் தேசத்தில் இடம்பெற்றது ஒரு இனப் படுகொலையே ஆகும்.
2. இறுதித் தீர்வு தொடர்பாக ஒரு இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்ட பின்னர் தாயகத்திலும் புலம்பெயர் மக்கள் மத்தியிலும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படல் வேண்டும்.
3. 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை நிராகரிக்க வேண்டும் என்பனவாகும்.

இவை தொடர்பான ஓர் இணக்கப்பாட்டை எட்டும் தருணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. உலகத் தமிழ் பேரவையும் (GTF)இறுதி முடிவு தொடர்பாகத் தமது தலைமைப் பீடத்துடன் பேசிய பின்பே தெரிவிக்கலாம் எனக் கூறி ஒன்றரை வருடமாக இழுத்தடிப்பு செய்து வருகின்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் சிவில் சமூகம் என்பன தாயகத்திலிருந்து சென்று தமது முழு ஒத்துழைப்பையும் கொடுத்து பல தடவை சந்திப்புக்களில் கலந்துகொண்டன. ஆனால் ஆறு தரப்புகளுக்குமிடையே இந்த இணக்கப்பாட்டை மீறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உலகத் தமிழ் பேரவையும்

(15 ஆம் பக்கம் பார்க்க)



# சூழலியல் மாற்றத்தில் அனர்த்தங்களின் பங்கு


காயத்திரி வி.

அனர்த்தம் என்பது மனிதர்களால் தடுக்க முடியாததும், சிறிய, பெரிய விளைவுகளை ஏற்படுத்துவதுமான மிகப் பாரதூரமான ஒன்றாக விளங்குகின்றது. மனித காரணிகளால் ஏற்படும் அனர்த்தமோ சுற்றுச் சூழலில் அதன் கட்டமைப்பில் மிகப் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இயற்கை ஒழுங்கு மாற்றம்+ காலநிலை மாற்றம் + இடர் / அனர்த்தம் = சூழல் தாக்கம். மனித நடத்தை + இயற்கை ஒழுங்கு மாற்றம் + காலநிலை மாற்றம் + இடர்/ அனர்த்தம் = சூழல் தாக்கம். அந்தவகையில் மேற் கூறிய இரு கோணங்களான இயற்கை ஒழுங்கு மாற்றம், மனித நடத்தை என்பவற்றால் காலநிலை மாற்றம் ஏற்படுகின்ற போது அது அனர்த்தமாக உருவெடுத்து சுற்றுச் சூழலில் பாரிய விளைவை உண்டாக்குகிறது. இன்று சூழல் தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துவது இயற்கையான ஒழுங்கில் தானாகவே ஏற்படும் மாற்றம், மனித செயற்பாட்டால் அல்லது மனித தூண்டுதலால் இயற்கை ஒழுங்கில் புகுத்தப்படும் மாற்றம். இவையே காலநிலையில் மாற்றத்தை கொண்டுவருவதுடன் அனர்த்திற்கு வழிவகுக்கின்றது. காலநிலை மாற்றம் என்பது "பாயத் தயாராக இருக்கும் பிசாசைப் போன்றது". தூண்டிவிடப்பட்ட பிறகு அதன் செயல்பாடுகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. காலநிலை மாற்றம் கொண்டு வரும் அனர்த்தத்தால் அதிகம் பாதிக்கப்படுவது வளர்ந்த நாடுகளை விட எம்மைப் போன்ற வளரும் நாடுகள் தான்.

இன்றைய சூழ்நிலையில்கோடைகாலத்தில்வெயில் அனலாகக் கொளுத்துகின்றது. மாசி, பங்குனி வரை குளிர் நீடித்தாலும், நேரெதிராகப் பகலில் வெயில் கொளுத்தி எடுக்கிறது. அதிகளவான ஆறுகளும் வளம்கொழிக்கும் நதிப்படுக்கைகள் சிலவும் இன்று வெறும் மணல் பாதைகளாக வெறித்து நிற்கின்றன. விவசாயம் செய்வதற்கல்ல, குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை. ஆனி மாதம் ஆடிக் காத்து அடிக்கிறது. பாரிய எரிமலைகள் எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென சீறிப்பாய்ந்து அனலாக விழுகின்றன. குண்டு வெடிப்பு, தீ, யுத்தம், இரசாயனக் கசிவு, கைத்தொழில் இடர், அணு பிரச்சினைகள் என்பவற்றால் நீர், நிலம், வளி என்பன பாதிப்பின் விளிம்பில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒட்டுமொத்த சூழல் காலநிலையால் தடம் மாறிவிட்டன. இதற்கெல்லாம் காரணம் என்ன? புவிவெப்பமடைதல் (Global Warming) அத்துடன் பின்னிப்பிணைந்துள்ள காலநிலை மாற்றம் (Climate Change) என்று தான் கூற வேண்டும்.

வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்களின் வெளியீடு, காடுகள் அழிக்கப்படுவது, வளிமண்டலத்தில் தூசுப்படலம் பெருகுவது போன்றவையே முக்கிய காரணங்களாகும். இவை ஏன் அதிகரித்தன? இதற்கு இயற்கை, மனித தலையீடுகள் காரணமாக உள்ளது. குறிப்பாக 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய தொழிற்புரட்சி உருவாக்கிய விளைவுகளின் தாக்கம் என்றும் கூறலாம். தொழிற்புரட்சி காலம் முதல் இயற்கை வளங்களைச் சுரண்டுவதன் ஒரு பகுதியாக காடழிப்பு நீடித்தது. இன்றும் நீடித்துவருகின்றது.

அத்துடன் தொழிற் சாலை, வாகனங்களில் இருந்து வெளிவரும் வாயுக்களின் (கார்பன் டைஆக்சைடு(கரிப்புகை), மீதேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்கள்) சங்கிலித் தொடர் விளைவால் உயிர்வாழத் தேவையான ஒட்சிசனின் அளவு குறைந்து காபனீரொட்சைட்டின் அளவு ஒரு படலம் போல பூமியைச் சூழ்ந்து நிற்கிறது. இதில் கரி அமில வாயுவே (கார்பன் டை ஆக்சைடு) முதல் இடத்தைப் பிடிக்கிறது. இதில் கரி அமிலக் காற்று - 49%, மீதேன் - 18%, குளோரோ ஃபுளோரோ கார்பன் - 14%, நைட்ரசன் காற்று - 6%, ஏனையவை - 13% என்றவாறு உள்ளன. இதனால் வெப்பநிலை கடுமையாக உயர்கிறது. மழை, குளிர், கோடை காலநிலைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கடல்மட்டம் உயர்ந்து தீவுகள், கடற்கரை பகுதிகள் அழிந்தும் அழியும் நிலையிலும் உள்ளன. இவ்வாறான இயற்கை பேரழிவுகள் அடிக்கடி நிகழ்கின்றன.



புவி வெப்பநிலையை நோக்கின் கடந்த நூற்றாண்டைவிட அதிக வெப்பநிலை நிலவிய ஆண்டாகக் கூறினால் கூட முன்னணியில் இருப்பவை 1990களுக்குப் பிறகு வந்த ஆண்டுகளே. கடந்த 10,000 ஆண்டுகளில், பூமிப்பந்தில் உள்ள கரியமில வாயுவின் அளவில் 10 சதத்துக்கு மேல் மாறுதல் நிகழ்ந்ததே இல்லை. ஆனால், கடந்த 200 ஆண்டுகளில் 30சதத்துக்கு மேல் கரியமில வாயு அடர்த்தியில் மாற்றம் ஏற்பட்டுளளது. யார் குற்றவாளி? தடயம் தேடலாமா? எனக்கேள்வி எழும்பின் அனைவரின் கைகளும் நீளவேண்டிய திசை வளர்ந்த நாடுகளும் அதற்கடுத்தபடியாக வளர்ந்துவரும் நாடுகளும் ஆகும். உதாரணமாகக் கூறின் உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 17 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளனர். இவர்கள் புவி வெப்பமடைதலுக்கு காரணமாகவுள்ள வாயுக்களில் 04 சதவீதத்தை வெளிவிடுகின்றனர். இந்தியாவில் அண்மைக்காலமாக (மே.2015) ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் அதிகரித்த வெயிலின் தாக்கத்தால் ஒரே நாளில் 651 பேர்உயிரிழந்துள்ள கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்துடன் அனல் காற்றும் அடிப்பதால் வயதானவர்கள், சிறியவர்கள் சுருண்டு விழுந்து இறப்புடன் ஏனைய உயிரிகள், இயற்கை அம்சங்கள் பாதிப்பின் விளிம்பில் தத்தளிக்கின்றன. மனிதருக்கே இப்படி என்றால் ஏனைய உயிரினங்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? இந்நிலை நாளுக்கு நாள் இந்த எண்ணிக்கையில் இருந்து 700 ஆக அதிகரித்து வருவதாக பிந்திய செய்தி வட்டாரங்கள் கருத்து வெளியிடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் இது மிகக் குறைவான அளவு எனினும் சூழல் தாக்கம் என்னவோ எமக்கும் உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

> புவி வெப்பநிலையை நோக்கின் கடந்த நூற்றாண்டை அதிக வெப்பநிலை நிலவிய ஆண்டாகக் கூறினால் கூட முன்னணியில் இருப்பவை 1990 களுக்குப் பிறகு வந்த ஆண்டுகளே.

உலகசுகாதார அமைப்பு2007ஆம் ஆண்டு வெளியிட்ட ஆய்வறிக்கையில், மனிதனால் உருவாக்கப்பட்டு வரும் காலநிலை மாற்றம் 2020 ஆம் ஆண்டு முதல் உலகெங்கும் 3,00,000 மக்கள் ஆண்டுதோறும் பலியாகக் காரணமாக இருக்கும். இருந்தும் இந்தக் கணிப்புக்கு முன்கூட்டியே 2000 ஆம் ஆண்டு முதல் உலகெங்கும் காலநிலை மாற்றத்தால் 1,50,000க்கும் அதிகமானோர் உயிழந்துள்ளமையும் சுற்றுச் சூழலில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் அழிவடைந்து வருகின்றமையும் கண்கூடு.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் திடீர் மழை, புயல், வெள்ளம் மற்றும் கடல் மட்ட உயர்வால் ஏற்படும் கடலரிப்பு என பன்முக தாக்கங்களை தெற்காசிய, தென்கிழக்காசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க, வளரும் நாடுகள் பெருமளவு சந்தித்து வருகின்றன.

இதிலும் குறிப்பாக மலைவாழ் மக்கள், கடலோர மக்கள், நதிக்கரையோர மக்கள், மற்றும் நிலமற்ற உழைக்கும் மக்கள் என விளிம்புநிலை மக்கள்தான் அதிகளவில் அழிவடைவதுடன் ஒட்டுமொத்த சுற்றாடல் தொகுதியே பாதிப்பை ஏற்கின்றது. அத்துடன் இன்றைய சூழ்நிலையில் புவியின் வெப்பநிலையானது அண்ணளவாக 0.8பாகை (செல்சியஸ்) வரை அதிகரித்துள்ளதாகத் கணிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக உலகின் மிகப் பெரிய தீவான கிரீன்லாந்தின் பனிப் பாறைகள், அண்டார்க்காவின் பனிப்பாறைகள் என்பன வேகமாக உருகி வருகிறது.

(09 ஆம் பக்கம் பார்க்க....)

# கூத்தமைப்பின் கூத்துக்கள் அம்பலம்

வணக்கம் வணக்கம்

நான் கல்வயல் கனகசிங்கம்

எப்படி உங்கட பாடு?

ஏதோ என்ர பாடும் போகுது.

வன்னியில இருக்கிற நட்பு களோட கூடிக்கதைச்சு ஒரு இரண்டு கிழமை, காலம்போனதே தெரியவில்லை. அதனால இஞ்சால பக்கமும் வரமுடி யாமல் போட்டுது.

இப்ப சூடான விடயமாக, கூட்டமைப்பு எம்பிமார் பின் கதவால காசு வாங்கின விபரம் தான் இருக்குது. ஊடகப்போச்சாலாரை மாட்டிவிட அவரு டைய பழைய நண்பரான அமைச்சர் தான் விசயத்தை முதலமைச்சரிட்ட போட்டுக்கொடுத்ததாகக் கதை அடிபடுகுது. அப்பவும் அந்த ஆள் திரும்ப, திரும்ப கேட்டதாம் நிதி ஒதுக்கீடோ அல்லது




கையில கொடுத்ததோவெண்டு. இப்ப தலையில அடிச்சுக் கொண்டதாகவும் கேள்வி.

வடக்கு மாகாணசபை இருக்கே யுக்கை அதை மீறி எம்பிமாருக்கு ஏன் நேரடியாக நிதி ஒதுக்கீடென்று முதல மைச்சர் கேட்கின்றார். முதலில வடக்கு மாகாணசபைக்கு ஒதுக்கிவாற நிதியை கூட செலவு செய்யாமல் திருப்பி விடுகிற தாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. அமைச்சர் மார் மற்றும் அதிகாரிகளது வினை திற மையின்மைதான் காரணமென சொல்லப் படுகின்றது.

அதனால தான் நேரடியாகத் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதாக சுரேஸ் பிறேமச்சந்திரன் சொல்கிறார். உதைதான் முந்தி டக்ளசும் செய்ய நாங்கள் சிறீப்பாய்ந்தனாங்கள். ரணில், பாலசிங்கத் தர் சொல்லுகிற மாதிரி சரியான நரியன் என்றது எல்லோருக்கும் தெரிஞ்ச விசயம் தானே பாருங்கோ.

ஆனாலும் கூட்டமைப்பில சகுனி ஆட்டம் ஆடுற எம்பியொருத்தர் இதன் பின்னணியில இருக்கிறதாக சொல்லப்படு கின்றது. பூநகரிப் பக்கம், சுரேஸ் பிறேமச் சந்திரன் காசு ஒதுக்கினதால தன்ர வாக்கு வாங்கி சிதைஞ்சு போடுமென்று அந்த ஆள் பயப்பிடுகிறதாகக் கேள்வி. அதனால தான் போட்டுக்கொடுத்து உள்வீட்டு குழப்பங்கள் உச்சமடைய வைச்சிருக்கிறதாக கிசுகிசுக் கப்படுகின்றது. எல்லாம் எப்படியெண்டா லும் அடுத்தமுறையும் கதிரையை கைப்பற்றுகிற நோக்கம் தான் பாருங்கோ.

பிரிட்டன் பேச்சு அம்பலமாகிப் போனதால பலர் சீற்றத்தில திரியினம். முன்னாள் சமாதான பேச்சு முகவர் எரிக்சொல்ஹெயம் முதல் பின்கதவு எம்பியெனப் பலருக்கும் ஊடகங்கள் மீது கடுப்பு எப்படியென்றாலும் எல்லா வற்றையும் ஊற்றிமூடிவிடவேண்டுமென்று அலைகினம். பில்லியன்களில டீல் முடிச்சாச்சு என்று கேள்வி. அதிலயும் ஆட்களோ இல்லாத புலம்பெயர் சிலமும், ஊடகங்கள் ஒரு சிலவும் கவிழ்ந்து போன தாகக் கேள்வி.

மே 19, 2009 பின்னதாக வலுவோடை இருந்த புலம்பெயர் உறவு களை எப்படியேனும் உடைச்சுப்போட வேணுமென்று ஆளாளுக்கு ஆலாய்ப் பறக்கினம். எங்கட ஆட்களிலயும் சிலருக் குத் தலைவர் மாதரி, தமிழ்ச்செல்வன் மாதிரி கோட் சூட் போட்டுக் கைகுலுக்கி பேப்பரில போட ஆசை. அதுவும் புலியைப் பார்த்து பூனையும் குறிசுட்ட கதை மாதிரி தான் பாருங்கோ. அதுக்கு பலியாடாக எங்கட சனங்கள் செய்த தியாகங் களோ எண்டு கேட்கிறன்.

கூத்தமைப்பில இருக் கிற எல்லோருக்கும் இருக்கிற ஒரே நோக்கம், அடுத்த முறையும், எப்படி சீற் பிடிக்கிறது தான் எண்டது சொல்லி புரிய வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்தில ஆசனக்குறைப்பு, வடகிழக்கு எங்கும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிகாரரின் அதீத வளர்ச்சி மற்றும் அதிகரித்து வரு கின்ற மக்கள் ஆதரவு எல்லாம் கூத்த மைப்பின்ர எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கி இருக்குது.

இந்த பயத்தில தான் சம்பந்தரை யும், மாவையரையும் போட்டி போடாமல் தேசியப்பட்டியலில் வாங்கோவெண்டு சகபாடிகள் கேட்டமையாம். ஆனா லும் இல்லையில்லை நாங்கள் போட்டி போடவென்று காட்டிறமென்று அவை யளும் சவால் விட்டதாக கேள்வி. அவை யள தேசியப்பட்டியலில போட்டி போட விட்டிட்டு தங்களுக்கு பாதையை உரு வாக்கலாமெண்டு இன்னொரு தரப்பு கனவு கண்டதாகவும் கேள்வி.

அதுக்குள்ள எம்பி சீற் கனவில இருக்கிற மாகாணசபை உறுப்பினர்களைக் காய்வெட்ட, மாமனிதர் ரவிராஜ் மனை வியை களம் இறக்கவும் முயற்சிக்கிறதாக கேள்வி. அதன்மூலம் அனந்தியை காய்வெட்ட பிளான்போட்டதோட, சம்பந் தர் நேரடியாகக் கூப்பிட்டு அம்மணியை அமர்த்தி வாசிக்கச் சொன்னதாகவும் கேள்வி. பார்ப்பம், எல்லாம் சந்தைக்கு வரும் தானே.

# நையாண்டியார்

## பதில்கள்

க.சிவரூபன்
கிழவிதோட்டம்,
கரவெட்டி.

**கேள்வி :** ரணிலிடம் பணம் பெற்றதாக முதலமைச்சர் போட்டுடைத்துள்ளாரே? சரியா? தப்பா?

**பதில்:** உண்மையினில் ஆண்டு தோறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கென ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, இதுவரை விடுவிக்கபட்டவில்லை. திறைசேரியினில் நிலவும் நிதி நெருக்கடியே காரணமென சொல்லப்படுகின்றது. ஆனால் அந்த நெருக்கடிகளைத் தாண்டி சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி விசேடமாக ஒதுக்கப்பட்டமை கேள்விக்குரியதே. ஆனாலும் இதனை அம்பலப்படுத்த முதலமைச்சரை தூண்டிவிட்ட அவரது அமைச்சர்கள் உள்நோக்கத்துடனும், கதிரைகளை கைப்பற்றவும் மட்டுமே முனைப்பு காட்டியிருந்தமை உண்மை.

ப.புருஷோத்தமன்
செட்டிகுளம்,
வவுனியா.

**கேள்வி :** பிரிட்டனில் நடந்த இரகசிய பேச்சு அம்பலமானதால், அரசியல் கைதிகளது விடுதலை குழப்பமுற்றுள்ளதாகத் தேசியப் பட்டியல் எம்.பி. சொல்லியிருக் கிறாரே?

**பதில்:** இதயங்களால் இணைத்தவர்கள், கப்பலை கவிழ்த்துவிடக் கூடாதென்பதில் கவ னமாக இருக்கிறார்கள். உயர்பாதுகாப்பு வலயம் விடுவிப்பு குறிப்பாக சம்பூர் விடுவிப்பு, காணாமல் போனோர், விவகாரம் குழப்பமடைய எதிர்வரும் காலங்களினில் நடக்கும் பேச்சுக்களைக் கண்டு கொள்ளாதிருக்க தேசியப் பட்டியல் எம்.பி. கோருவாரென்று நம்பலாம். அது சரி அந்த சொகுசு கார் கதை என்னவாயிற்று?

ப.சுதாங்கன்,
வாகரை, மட்டக்களப்பு.

**கேள்வி:** கிழக்கினில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அதிகரித்து வரும் ஆதரவே ஏனைய தரப்புக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதே?

**பதில் :** கட்சித் தலைவரை தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் வருமாறு சகபாடி கள் கேட்கும் அளவினில் அச்சம் பரவியிருக்கின்றது. கட்சித் தலைமை களை கவிழ்க்க புலம்பெயர் தேசங்களிலிருந்து டொலர்கள் வருவதாக புலம்பல்களும் அதிகம் கேட்கின்றது. சில இடங்களினில் மிரட்டல்கள் கூட அரங்கேற்றப்படுகின்றது. எல்லாமுமே கதிரைகளைத் தக்க வைத்துக் கொள்ளவும் நாட்டுக்கு வெளியே உள்ள குடும்பங்களது நலன்களை பேணு வதனைத் தவிர வேறெதுவுமில்லை.

ச.ஆசைப்பிள்ளை
நானாட்டான்,
மன்னார்.

**கேள்வி:** காணாமல் போனோர் விவகாரம், நிலசுவீகரிப்பு போன்றவைக்கான போராட்டங்கள் ஓய்ந்து போய்விட்டனவே?

**பதில்:** மக்களை ஒழுங்குபடுத்தி, தலைமை தாங்கி போராட்டங்களை முன்னெடுக்க தமிழ்த் தலைமைகள் தவறிவிட்டன என்பதே உண்மையாகும். பிரச்சினைகள் எவையும் தீர்ந்தபாடாக இல்லை. ஆனால் படகுகளைக் கவிழ்த்துவிடாதீர்கள் என்று அரசியல் செய்யும் தரப்புக்களது கைகள் ஓங்கியுள்ளதும் இதற்குக் காரணமாகலாம்.

க.சரவணன்,
காரைதீவு.


**கேள்வி:** வித்தியா கொலை விவகாரத்தைக் கையாளப் பயங்கரவாத தடைச்சட்டம் தேவையா?

**பதில்:** பயங்கரவாத தடைச் சட்டத்தைத் தொடர்ந்தும் வைத்துக் கொள்ள இந்த அரசும் விரும்புகின்றது. அதனாலேயே இதுவரை காலமும் புலிப்பூச்சாண்டி காட்டி, அதனை நியாயப்படுத்தி வந்த தரப்பு, தற்போது சட்டம் ஒழுங்கு சீர்கெடுவதாகக் கூறி, பயங்கரவாத தடைச் சட்டத்தை நிலை நிறுத்த முற்படுகின்றது.

# படைமுகாம்களுக்காக மாணவர்களின் கல்வி உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது

## இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசேப் ஸ்ராலினுடன் ஒரு நேர்காணல்

நேர்கண்டவர் : சி.அ.யோதிலிங்கம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

**கே: 19 ஆவது திருத்தத்தை இரு பிரதானகட்சிகளும் இணைந்து நிறைவேற்றியிருக்கின்றன. முரண்டு பிடித்துக் கொண்டிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி பின்னர் ஆதரவு தெரிவித்தது இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் என நீங்கள் நினைக்கின்றீர்கள், சுதந்திரக் கட்சி கொஞ்சம் கொஞ்சமாக மைத்திரியின் செல்வாக்கிற்குள் வருகின்றது என இதனை எடுத்துக் கொள்ளலாமா?**

ப: ஜனாதிபதி முறை அறிமுகப் படுத்தப்பட்டு 37 வருடங்களாகின்றது. இந்த முறைக்கெதிரான எதிர்ப்பும் 37 வருடங்களாக இருந்து வருகின்றது. 19 ஆவது திருத்தத்தினை மக்கள் விரும்புவதால்தான் கொண்டு வந்தனர். இதனை ஆதரிக்காவிட்டால் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டிவரும் என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் ஆதரித்தனர். இங்கும் கூட முழுமையாக ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு சுதந்திரக் கட்சிக்காரர்கள் விடவில்லை. ஜனாதிபதி அதிகாரத்தின் மீதான தடைகளைத் தான்ஆதரித்திருந்தனர். இதையும்ஆதரிக்காவிட்டால் அவர்கள் மக்கள் மத்தியில் செல்ல முடியாது.

ஜனாதிபதி முறையை ஆதரித்தவர்கள்கூட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மீது தடைகள் வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டிருந்தனர். இதைவிட ஆட்சிமாற்றத்திற்கு பின்னாலிருந்த அமெரிக்க - இந்திய சக்திகளும் சுதந்திரக்காட்சிகாரர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்திருக்கலாம். இங்கும்கூட பாராளுமன்ற உறுப்பினர்களை மாணவர்கள் போல கட்டி வைத்துத்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த ஆதரவு சுதந்திரக் கட்சியின் பிளவினை சரிசெய்துவிட்டது எனக் கூறமுடியாது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதிக்கத்தை மைத்திரி தன் கையில் எடுக்கும் போதே அங்கு நிலைமைகள் மாறும்.

19 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான மைத்திரி - மகிந்தர் பனிப்போரில் மைத்திரி வெற்றியடைந்திருக்கின்றார். எதிர்காலம் எப்படிப்போகும் எனக் கூறமுடியாது. எதிர்க்கட்சித் தலைவராக தினேஸ் குணவர்த்தனாவைக்கொண்டு வரும் முயற்சியும் தோல்வியடைந்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் வரும் போது தனது வெற்றிக்கு காரணமாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக மைத்திரி பிரச்சாரம் செய்வரா என்ற கேள்வியும் எழுகின்றது.

**கே: தமிழ்மக்களுக்கு சார்பான சிங்கள சக்திகள் ஆட்சிமாற்றத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ்மக்களைப் பற்றிப் பேசுவதையே கைவிட்டுள்ளனர். இதனை ஒரு நேர்மையான அரசியல் செயல்பாடு என நீங்கள் கருதுகிறீர்களா? முன்னரே தயான்ஜயதிலக போன்றவர்கள் குத்துக்கரணம் அடித்து பேரினவாதத்தைப் பாதுகாக்கும் புலமையாளராக மாறியுள்ளார். இந்நிலையில் சிங்கள சக்திகளைத் தொடர்ந்தும் தமிழ் மக்களினால் நம்பமுடியுமா?**

ப: தயான் ஜயதிலக ஊடகங்களினால் உருவாக்கப்பட்ட ஒரு புத்திஜீவி, தற்போது இனவாதத்தை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டும் என்பதற்காகத் தமிழ்மக்களைப் பற்றிப்பேசுவதை கைவிட்டிருக்கின்றார். பேரினவாத அரசியலுக்கு புலமைப்பின் பலம் கொடுத்து வருகின்றார். அவரைத் தமிழ் மக்கள் கணக்கெடுக்கத் தேவையில்லை ஆனால் தமிழ்மக்களின் விவகாரங்களில் உண்மையாகவே செயற்பட்ட பலர் ஆட்சி மாற்றத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் மகிந்தர் மீள்எழுச்சியடையக் கூடாது என்பதற்காகவும் தமிழ்மக்களைப் பற்றிப் பேசுவதை கைவிட்டிருக்கின்றனர்.

இது மிகவும் தவறானது. கொள்கை நேர்மை இல்லாதசெயற்பாடு. இவர்கள் தொடர்ந்தும் மௌனம் சாதித்தால் தமிழ்மக்கள் இவர்களை கைவிட்டு தனித்துத் தான் தங்கள் அலுவல்களைப் பார்க்கமுற்படுவர்.

**கே: 19 ஆவது திருத்தச் சட்டத்தினால்தமிழ், முஸ்லீம், மலையக மக்களுக்கு ஏதாவது பயன்கள் கிடைக்கும் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

ப: சிறப்பான பயன்கள் எதுவும் கிடைக்கப்போவதில்லை. பொதுவான பயன்கள் மட்டுமே கிடைக்கும். பொதுவாக இலங்கை மக்கள் அனைவருக்கும் கிடைக்கின்ற சலுகைகள் தமிழ் முஸ்லீம், மலையக மக்களுக்கும் கிடைக்கும். வரவு செலவுத்திட்டச் சலுகைகளைப்போல சில கிடைக்கலாம். ஆனால்ஒடுக்கப்படுகின்ற மக்கள்என்ற காரணத்தினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கப்போவதில்லை. உயர்நீதிமன்றப் பதவிகளில் இன விகிதசாரம் பேணப் படல்வேண்டும் என்ற டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையை நாம் கவனிக்கவேண்டும்.

**கே: ஆட்சிமாற்றம் தமிழ்மக்களின் வாக்குகளினால்தான் ஏற்பட்டது. ஆனால் இம்மாற்றம் தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்கவில்லை. அவர்களுக்கு சார்பாக இருந்த சர்வதேச விசாரணை கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு சார்பாக இருந்த புவிசார் அரசியலும் இல்லாமல் போயுள்ளது. தமிழ்த்தேசிய அரசியலின் மீள்எழுச்சியை மேற்குலகமோ இந்தியாவே விரும்பவில்லை. இந்நிலையில் தமிழ்த் தேசிய அரசியலை எவ்வாறு முன்கொண்டு செல்வது?**

ப: புலிகள் ஏன் உருவானார்கள்? தமிழ் அரசியலை 50 களிலிருந்து பார்க்க வேண்டும். அப்போதிருந்தே ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியது. ஆயுதப்போராட்டம் தான் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதே தவிர என்ன காரணங்களுக்காக அந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்தக்காரணங்கள் தீர்தது வைக்கப்படவில்லை. காரணங்கள் மாறவில்லை. அவை அப்படியே இருக்கின்றன. வெறுமனவே ஆளுநரை மாற்றுவதால் எதுவும் நடக்கப்போவதில்லை.

தமிழ்மக்களிடம் பறிக்கப்பட்டகாணிகள் இன்னமும் முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை. இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை. பயங்காரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அரசியல் தீர்விற்கான முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை. அதற்கான அறிகுறிகளையும் காணமுடியவில்லை.

இவையெல்லாம் தமிழ்மக்களின் உரிமைகள், இவற்றை தீர்க்கமால் உரிமைகள் உருவாக்கப்படும் எந்த ஜனநாயகச் சூழலும் உண்மையான ஜனநாயகச் சூழலாக இருக்கமாட்டாது. சர்வதேச ஆதரவு இல்லையானால் போராட்டம் மேலும் பின்னடைவைச் சந்திக்கும். தமிழ்மக்களுக்கு தொடர்ந்தும் போராட வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதனை முன்னெடுப்பது தமிழ்த்

**தற்போது போர் இல்லை. அப்போ ஏன் உயர் பாதுகாப்பு வலயம்? தென்னிலங்கையில் உயர் பாதுகாப்பு வலயம் இருக்கின்றதா? உயர் பாதுகாப்பு வலயத்தை உடன் நீக்க வேண்டும். படைமுகாம்களை வேறு இடங்களுக்கு நகர்த்தட்டும். படைமுகாம்களுக்காக மாணவர்களின் கல்வி உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது.**

தேசியவாதிகளின் கைகளில் தான் தங்கி யிருக்கின்றது.

ஆட்சி மாற்றத்தினால் சர்வதேச விசாரணைகளை கிடப்பிற்கு சென்றமையும் புவிசார் அரசியல் சாதகமாக இல்லாமல் போனமையும் உண்மையே. தமிழ் அரசி யல் தலைமைகள் வலுவான பேரம்பேசலை ஆட்சிமாற்றத்திற்கு பின்னால் நின்று செயற்பட்ட அமெரிக்க இந்தியக் கூட்டுடனும், மைத்திரி- ரணில் - சந்திரிகா கூட்டுடனும் நடாத்தியிருக்கவேண்டும். அவர்கள் இவ் விடயத்தில் தவறிழைத்துவிட்டனர்.

**கேள்வி : நீங்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் இன்று தமிழ்க் கல்வி எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவையென நீங்கள் அடையாளம் காண்கிறீர்கள்?**

பதில் : எல்லா இனங்களையும் உள்ளக்கிய கல்விக் கொள்கை இல்லை. சிங்கள மொழி பெயர்ப்புப் பாடநூல்களையே தமிழ் மாணவர்கள் கற்கின்றனர். அவை பல மொழிபெயர்ப்புத் தவறுகளைக் கொண் டுள்ளன.

அத்துடன் சிங்கள இனம் பற்றி தகவல்களையே அதிகளவில் கொண் டுள்ளன. மாணவர்களுக்கு பாடநூல்கள் அவர்கள் சார்ந்த சுற்றாடல், சமூகம் சார்ந்த தாக இருக்க வேண்டும். சூழலுடன் இணைந்து கற்கும் போதே அவர்களுடைய ஆளுமை விருத்தியடையும். மொழிபெயர்ப் பும் பாடநூல்கள் தமிழ் மாணவர்களின் ஆளுமையை சிதைப்பனவாகவே உள்ளன.

கல்விவளங்களைப்பங்கிடுவதிலும் மோசமான பாரபட்சம் காட்டப்படுகின்றது. வடமாகாணத்திலுள்ள மடு, துணுக்காய், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா கல்வி வலயங்களில் வளப்பற்றாக்குறைகள் அதி கமாக உள்ளன. அங்கு போதிய ஆசி ரியர்கள் இல்லை. (பிரசவ லீவு உட்பட) லீவு எடுப்பது கடினம், போக்குவரத்து வசதிகள் இல்லை, ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதிகள் இல்லை. சேவைக்காலப்பயிற்சிகள் இல்லை. நிதி மோசடி உட்பட அதிகாரிக ளின் மோசடிகளும் அதிகமாக உள்ளன.

இந்தப் பற்றாக்குறைகள் பற்றி மத்திய அரசு சரியான தீர்மானங்களை எடுப்பதில்லை. மாகாண சபைகளும் எடுப்ப தில்லை. வடமாகாண சபை தனக்கிருக் கின்ற அதிகாரங்களை ஒழுங்காகப் பயன் படுத்துகின்றது எனவும் கூறமுடியாது.

அங்கு மாகாண கல்வி அமைச் சரைக் கேட்டால் ஆளுநரைக் கேள் என்பார். ஆளுநரைக் கேட்டால் கல்வி அமைச்சரைக் கேள் என்பார். இருவருக்கும் தங்களுடைய அதிகார அளவு தெரியாதா?

வடபகுதி போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். இங்குசிறப்புக்கவனங்கள்தேவை.

**கேள்வி : போர் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் இன்னமும் பலாலி ஆசிரி யர் பயிற்சிக்கலாசாலை விடுவிக்கப் படவில்லை. பிரசித்தி பெற்ற காங் கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் இவற்றை எவ்வாறு பெற்றுக் கொள் வது?**

பதில் : இது தொடர்பாக போராட்டங் களை நாம் யாழ்ப்பாணத்திலும், யாழ்ப் பாணத்திற்கு வெளியிலும் நடாத்தினோம். ஆனால் அரசு அக்கறை செலுத்தவில்லை. வடமாகாண சபையும் அக்கறை செலுத்த வில்லை. வடமாகாணத்திலுள்ள அனைத் துச் சக்திகளையும் இணைத்து போராட்டம் நடத்த வேண்டும்.

**கேள்வி : பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் காங்கே சன்துறை நடேஸ்வராக் கல்லூரி யும் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்றன. அங்கு படைமுகாம் கள் இருக்கின்றன. எனவே அவற் றைத் தர முடியாது என ஆட்சியாளர் களும் படையினரும் கூறுகின்ற னரே?**

பதில்: தற்போது போர் இல்லை. அப்போ ஏன் உயர் பாதுகாப்பு வலயம்? தென்னிலங்கையில் உயர் பாதுகாப்பு வலயம் இருக்கின்றதா? உயர் பாதுகாப்பு வலயத்தை உடன் நீக்க வேண்டும். படைமுகாம்களை வேறு இடங்களுக்கு நகர்த்தட்டும். படை முகாம்களுக்காக மாண வர்களின் கல்வி உரிமையை விட்டுக் கொடுக்கமுடியாது. இனப்பிரச்சினையைதீர்க் காததினால்தான் அவர்கள் பாதுகாப்புப் பற்றிச் சந்தேகப்படுகின்றனார். இனப்பிரச்சினை யைத் தீருங்கள் சந்தேகம் எதுவும் வராது. இதுவிடயத்தில் ஒரு பரந்துபட்ட போராட்டத்தை நடத்த நாம் தயாராக வேண்டும். தமிழ் அரசியல் சக்திகள், தொழிற்சாங்க சக்திகள், முற்போக்கு ஜன நாயக சக்திகள் என்போரை இணைத்து நாம் போராடத் தயாராக வேண்டும்.




# சூழலியல் மாற்றத்தில்....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் வளைகுடாவானது தனித்துவமிக்க சூழல் மண்டலங் களைக் கொண்ட ஓர் அற்புதமான உயிர்ச்சூழல் அமைவாகும். பவளப் பாறைகள், கடற்புல்வெளிகள், வண்ண மீனினங்கள், மெல்லுடலிகள், நண்டு கள், கடற்பாசிகள் எனப் பல அரிய உயிரினங்களின் புகலிடமாக மன் னார் வளைகுடா திகழ்கிறது.

இக்கடல்சார் உயிர்ச்சூழலில் 22தீவுகள் உள்ளன. பத்தாயிரத்து ஐந்நூறு சதுர கி.மீ பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் இவ்வுயிர்ச்சூழலில் இதுவரை மூவா யிரத்து அறுநூறு உயிரினங்கள் அடையாளங்காணப்பட்டு வகைப்படுத் தப்பட்டுள்ளன. அத்துடன் ஆச்சரிய மளிக்கும் வகையில் பல்வேறுபட்ட தாவர விலங்கினங்களைக் கொண்டி ருக்கிறது. இங்கு மட்டுமே நூற்றி ஐம் பது வகைக்கும் மேற்மேட்ட கடற் பாசிகள் உள்ளன. மேலும் இங்குள்ள பவளப்பாறைகளானது கடல்சார் உயி ரினங்களின் உணவுச்சங்கிலியில் முக் கியப் பங்களிப்புச் செய்கிறது. மேலும் இவை ஆழிப் பேரலை போன்ற இயற் கைப் பேரிடரைத் தடுக்கும் வல்லமை கொண்டவை. செறிவுமிக்க கடல்சார் உயிரினங்களைக் கொண்ட இவ்வு யிர்ச்சூழலை 1980ஆம் ஆண்டில், பாது காக்கப்பட்ட கடல்சார் உயிரின தேசி யப் பூங்காவாக இருந்தது. எனினும் வேகமாக அதிகரித்துவரும் மனி தர்களின் உள்ளீட்டால், குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த கள்ள வர்த்தக வணி கத்தால் மோசமான கடல்வள அழிவை இப்பகுதி எதிர்கொண்டு வருவதோடு புவிவெப்பமடைதல் எனும் பெரும் அச்சு றுத்தலுக்கும் உள்ளாகி வருகிறது.

வரட்சி காரணமாக எழும் குடிநீர் பற்றாக்குறையால் வடக்கு ஆசி யாவில் 50 கோடி மக்களும் சீனா வில் 25 கோடி மக்களும் பாதிக்கப்படு வதுடன் பனிப்பாளம் உருகி ஆற்றோட் டம் குறைவதால் இந்திய மக்கள் பெரி தும் பாதிக்கப்படுவார்கள். 2020ஆம் ஆண்டில் ஆசியாவில் 12 கோடி மக் கள் முதலாக 120 கோடி மக்கள் வரை சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். ஆப்பி ரிக்க நாடுகளில் 7 கோடி 50 லட்சம் மக்கள் வரையிலும், தென் அமெரிக்க நாடுகளில் 1 கோடி 20 லட்சம் முதல் 8 கோடி 10 லட்சம் வரையான மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என தட்ப வெப்ப மாற்றத்தைத் துல்லியமாக ஆய்ந்தறி யும் அரசுகளுக்கு இடையிலான குழு (IPCC) தெரிவித்துள்ளது. இதனால் மனிதர்கள் மட்டுமா உயிருள்ள அனைத்து ஜீவராசிகளும் அழிக்கப் படும் நிலையிலுள்ளனர். அதேபோல் பயிர்களின் வளர்ச்சிப் பருவம் சுருங் கும். இதனால் 2020 ஆம் ஆண்ட ளவில் ஆப்பிரிக்க நாடுகளில் 50 வீதமளவில் விளைச்சல் குறையும். அதேபோல் மத்திய ஆசியா மற்றும் தெற்கு ஆசிய நாடுகளில் 2050ஆம் ஆண்டளவில் 50 சதவீதம் விளைச் சல் குறையுமென எதிர்பார்க்கப்படு கின்றது. ஏன் யாழ்ப்பாணத்தில் கூட 2013/2014 பகுதியில் மழை வீழ்ச்சியின்மையால் ஏற்பட்ட வரட்சி யால் 5777 ha நெல் விளைநிலங்கள் அழிவடைந்தன. இதேநிலை குருநா கல், அம்பாந்தோட்டை, கிளிநொச்சி போன்ற நெல்விளையும் பகுதிகளில் நிலவுகின்றது. அதேபோல் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட அழிப்பேரலையில் கட லோரப் பகுதியில் அறுவடைக்குக் காத்தி ருந்த நெற்பயிர் அழிவடைந்தது. பல பகுதிகளில் ஆழிப்பேரலையால் கடல்நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் ஒவ் வாததாக மாறியுள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டில் இந்தியாவில் இரண்டு இலட்சம் ஏக்கர் பரப்பில் அறுவடைக்குத் தயாராகஇருந்த நெற்பயிர்கள் நீரில்மூழ்கி அழுகிப்போயின. யாழ்ப்பாணத்தில் கூட 2007, 2008, 2012 காலங்களில் மழை அழிவு ஏற்பட்டதுடன் பெரும் எண்ணிக்கையான பயிரிழப்பையும் உண்டாக்கி விட்டது. முறையே 504 ha" 969 h" 3390 ha என அழிவைச் சந்தித்தது. ஏன் 6 வருடங்களின் பின் மேற்காவுகையூடான இடை அயனப் பருவ மழையால் கூட யாழ்ப்பாணத்தில் விவசாயச் செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத் தியது. அதேபோல் தற்போது உலகையே ஆட்டிப்படைக்கும் நிலநடுக்கத்தால் சூழல் தலைகீழாக மாறுகின்றது. ஜப்பானில் 2011இல் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 800 போர் கொல்லப்பட்டனர். அதேபோல் இந்த ஆண்டு ஏப்ரலில் 25ல் நேபாளத்தில் ருத்ர தாண்டவம் ஆடிய நிலநடுக்கத்தால் 8000 – 10000 பேர் மண்ணோடு மண்ணாக மாய்ந்ததுடன் 80,00000 பேர் பாதிக் கப்பட்டது மட்டுமல்லாமல் வீடுகள், கட்ட டங்கள் அழிந்தும் உள்ளன. இலங் கையும் வெகுவிரைவில் இவ்வாறான கோரத்தாண்டவத்திற்கு உட்படலாம் என அஞ்சப்படுகிறது.

தொழில்நுட்பங்கள் மனிதர்களி னுடைய அன்றாட வாழ்க்கைக்கு சாத கமான தாக்கங்களையே ஏற்படுத்தியிருந் தாலும் கூட துரித சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப உணவை வழங்க வேண்டிய நிலையில், சிறிய நிலத் தினைப்பயன்படுத்தி அதிக உற்பத்திப் பொருட்களைப் பெற வேண்டும் எனும் நிலமை உள்ளதுடன் உயர் உற்பத்தி யைப் பெறவேண்டும் என்பதற்காக பயிர்களுக்கு களைக்கொல்லிகள், கிருமி நாசினிகள், உரங்கள் முதலானவற்றைப் பயன்படுத்த வேண்டிய நிலமை காணப் படுகின்றது. கிருமிநாசினிகளைப் பயிர்க ளுக்கு தெளிப்பதற்காக விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் அதன் செறிவு பரவலடைந்து செல்வ தனால் அச்சூழல் தொகுதியில் வாழுகின்ற பல்வேறு வகையான உயிரினங்கள் ஆபத்துக்கு உள்ளாவதுடன், அவ்வாறான ஆபத்துக்கள் உணவுச்சங்கிலி, உணவு வலைகளில் ஆபத்துக்களை ஏற்படுத்து வதனால் மனிதருக்கான உணவுகளில் பாதிப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் பொறுத்தவரை நிலைத்த வளர்ச்சி நட வடிக்கைகளே நமக்குத் தேவை. ஏனெ னில் காலநிலை மாற்றம் என்பது தற் போது மட்டும் நிலவி மறைந்து விடப் போகிற ஒரு பிரச்சினையுமல்ல அல்லது இது ஒரு நோயுமல்ல. யோசனையற்று இயற்கையை அழிப்பதன் விளைவாக வாழ்வாதார அமைப்புகள் சிதைவதன் முழுமையான அறிகுறி அது. இதற்கு நாம் பெரும் விலையைத் திரும்பச் செலுத்த வேண்டி இருக்கிறது. அந்த நோயை தீர்ப்பதற்கான வழிமுறையை நாம் கண்டறிய வேண்டி இருக்கிறது.




பிரசவ காலத்திற்கான உங்கள் பொருட்களையும் குழந்தைக்கான பொருட்களையும் சேகரித்து ஆயத்தமாக இருப்பதுடன் எல்லாமே பூர்த்தியாகிவிட்டது என்று எண்ணி விடாதீர்கள். இன்னும் சில விடயங்களை யிட்டு முன்கூட்டியே திட்டமிட வேண்டியது அவசியம்.

## எந்த வைத்தியசாலை?

நீங்கள் கர்ப்பவதி நலம் பேணும் வைத்தியதிற்காக (Antenatal Clinic) செல்வது, பிரசவ வசதியும் உள்ள வைத்திய சாலையாக இருந்தால் இந்தக் கேள்வி எழாது. அங்கேயே பிரசவத்திற்கும் செல்லலாம். ஆனால், நீங்கள் உங்கள் பகுதி ஆரம்ப சுகாதார நிலையத்திலோ அல்லது உங்கள் குடும்ப வைத்தியரிடமோ இவ்வளவு நாளும் கர்ப்பவதி நலம் பேண் வைத்திய சேவையைப் பெற்று வந்தால், பிரசவத்திற்காக, வேறு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியிருக்கும். நீங்கள் தேர்ந்து எடுக்கும் வைத்திய சாலை, உங்கள் வீட்டிலிருந்து வெகு தூரத்தில் இல்லாமல், அண்மையில் இருப்பது அவசியம். வைத்தியசாலையைத் தேர்ந்து எடுப்பதற்கு உங்கள் குடும்ப வைத்தியரின் ஆலோசனையையும் பெறலாம்.

தலைப்பிரசவமாக இருந்தால் பல்வேறு வைத்திய வசதிகள் உள்ள அல்லது அம்புலன்ஸ் வசதி உள்ள வைத்தியசாலைக்குச் செல்வது நல்லது.

உங்கள் பிரசவத்தின்போது ஏதாவது பிரச்சினைகள் ஏற்படலாம் என்று உங்கள் குடும்ப வைத்தியர் முன்கூட்டியே எச்சரித்திருந்தால், அவரது ஆலோசனையுடன் தகுதி வாய்ந்த மகப்பேற்று நிபுணரின் சேவையைப் பெறக்கூடிய வைத்திய சாலைக்குச் செல்வது அவசியம்.

சாதாரணகமாகக் குழந்தைகள் பிறக்கும்போது தலைதான் முன்வரும். அப்படி இல்லாமல் குழந்தை காற்பக்கமாகப் பிறக்கப் போகிறது என்று எதிர்பார்த்தால், அல்லது இரட்டைப் பிள்ளைகளாக இருந்தால் அல்லது கர்ப்பகால வலிப்பின் முன்நிலை இருந்தால், அல்லது இரத்தப்போக்கு இருந்தால் முன்கூறியபடி மகப்பேற்று வைத்திய நிபுணரின் சேவையைப் பெறக் கூடிய வைத்தியசாலைக்குச் செல்வது அவசியம்.

முன்னைய பிரசவம் சத்திரசிகிச்சை மூலம் நடந்திருந்தாலும் அத்தகைய வைத்தியசாலைக்கே செல்ல வேண்டும். வேறும் பல காரணங்களுக்காகவும் இத்தகைய வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியிருக்கும். அப்படி ஏதாவது அவசியம் இருந்தால், உங்கள் குடும்ப வைத்தியர் அதைப் பற்றி உங்களுக்கு முன்கூட்டியே சொல்வார்.

## எப்படிச் செல்வது?

முன்னேற்றம் அடைந்த நாடுகளில், பெண்களுக்குப் பிரசவ வேதனை ஏற்பட்டதும் வைத்தியசாலைக்குத் தொலைபேசி மூலம் அறிவித்ததும், அம்புலன்ஸ் வண்டி உடனே வந்து அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும். எமது நாட்டில் இத்தகைய வசதிகள் கிடையாது. எதிர்வரும் ஆண்டுகளில் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை.

எனவே, பிரசவத்திற்காக வைத்திய சாலை செல்ல வேண்டிய பிரயாண ஒழுங்குகளை முன்கூட்டியே ஏற்பாடு செய்து வையுங்கள். உங்கள் வீட்டிலேயே கார் இருந்தால், இப்பிரயாணம் இலகுவாகிவிடும். ஆனால் காரை யார் ஓட்டுவது என்பதை முன்கூட்டியே தீர்மானித்து வையுங்கள். காருக்குள் போதிய அளவு பெற்றோல் இருக்கிறதா என்பதையும் நிச்சயப்படுத்தி வையுங்கள். வாடகைக் காரில் செல்ல வேண்டி இருக்குமேயானால் காரோட்டியோடு முன்கூட்டியே இதுபற்றி ஒழுங்கு செய்துவையுங்கள். எங்கு அவருடன் தொடர்பு கொண்டு அறிவிப்பது இரவு நேரத்திலும் அவரது சேவை கிடைக்குமா என்பது பற்றி அறிந்து வைத்திருங்கள்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தால், அந்நேரத்தில் காரில் செல்வதற்கான உத்தரவுப் பத்திரத்தை முன்கூட்டியே தகுதி வாய்ந்த அதிகாரியிடம் பெற்று வையுங்கள்.

## தொலைபேசி வசதி இருந்தால்

உங்களிடம் தொலைபேசி வசதி இருந்தால் சில முக்கிய தொலைபேசி இலக்கங்களை ஒரு மட்டையில் எழுதி, உங்கள் தொலைபேசிக்குப் பக்கத்தில் வையுங்கள். உதாரணமாக, உங்கள் கணவரின் அலுவலக தொலைபேசி எண், உங்கள் குடும்ப வைத்தியரின் தொலைபேசி எண், நீங்கள் செல்ல இருக்கும் வைத்தியசாலையின் தொலைபேசி எண் ஆகியன முக்கியமானவை.

அவசர தேவையின்போது நீங்களோ அல்லது உங்கள் வீட்டில் இருக்கும் மற்றவர்களோ மேற்கூறியவர்களுடன் கால விரயமின்றித் தொடர்புகொள்ள இந்த உத்தி உதவும்.

## வீட்டுப் பொறுப்பு

நீங்களே உங்கள் வீட்டின் தலைவி. அங்கு நடைபெறும் ஒவ்வொரு சிறு வேலைகளும் ஒழுங்கு முறைகளும் உங்கள் தலைமையிலும் அவதானிப்பிலும், மேற்பார்வையிலுமே நடைபெறுகின்றன. நீங்கள் சில நாட்களுக்கு பிரசவத்திற்காக வைத்திய சாலை சென்றதும் உங்கள் வீட்டின் பொறுப்பு யாவுமே ஸ்தம்பித்துவிடும். எனவே இவை தங்குதடையற்ற நீரோட்டம் போல் ஒழுங்காக நடைபெற முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

**சாதாரணமாகக் குழந்தைகள் பிறக்கும்போது தலைதான் முன்வரும். அப்படி இல்லாமல் குழந்தை காற்பக்கமாகப் பிறக்கப் போகிறது என்று எதிர்பார்த்தால், அல்லது இரட்டைப் பிள்ளைகளாக இருந்தால் அல்லது கர்ப்பகால வலிப்பின் முன்நிலை இருந்தால், அல்லது இரத்தப்போக்கு இருந்தால் முன்கூறியபடி மகப்பேற்று வைத்திய நிபுணரின் சேவையைப் பெறக் கூடிய வைத்திய சாலைக்குச் செல்வது அவசியம்.**

தமிழரது பழக்கவழக்கப்படி உங்கள் குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பமாக இருந்தால், இந்தப் பிரச்சினை ஏற்படாது. உங்களது தாயாரோ சகோதரியோ உங்கள் கடமைகளைத் தயங்காது தற்காலிகமாக ஏற்றுக் கொள்வார்கள்.

ஆனால் இந்த நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. உத்தியோக நிமித்தம் வெளியூர்களில் வசிப்பதாலும், வேறு சமூகப் பொருளாதார காரணங்களாலும் கூட்டுக் குடும்பமுறை முறிந்து, தனிக் குடித்தனங்கள் பெருகிவருகின்றன. உங்கள் குடும்பமும் இத்தகையதாக இருக்கலாம்.

அப்படியாயிருந்தால், நீங்கள் பிரசவத்திற்காக வைத்தியசாலை செல்லப் போகின்ற நாட்களுக்கும், வீடு திரும்பிய பின் வீட்டுப் பொறுப்பை நீங்கள் ஏற்கும் வரைக்கும், உங்கள் குழந்தைகளைப் பராமரிக்க, உங்கள் உறவினர் ஒருவரையோ, உங்கள் நண்பர் ஒருவரையோ நிச்சயம் ஒழுங்கு செய்திருப்பீர்கள். ஏன், உங்கள் கணவர் கூட அலுவலகத்திற்கு சில நாட்களுக்கு லீவு போட்டுவிட்டு உதவி செய்யக் கூடும். ஆனால்! திடீரென்று நடுநிசியில் உங்களுக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்தால் என்ன செய்வீர்கள்? அவசரத்திற்கு உங்கள் குழந்தைகளை, அண்டை வீட்டிலோ, உறவினர் வீட்டிலோ திடீரெனச் சேர்ப்பதற்கான ஒழுங்குகளைச் செய்து வையுங்கள்.

அதேபோல் பிள்ளைகள் பாடசாலை சென்றிருக்கும் நேரத்தில் பிரசவவேதனை ஆரம்பித்துவிட்டால், அவர்களைப் பாடசாலையில் இருந்து அழைத்து வருவதற்கும், அதற்குப் பின் சிறிது நேரம் அவர்களைக் கவனித்துக் கொள்வதற்குமான ஒழுங்குகளையும் செய்ய மறந்துவிடாதீர்கள்.

நீங்கள் இல்லாத வேளைகளில் உங்கள் வீட்டுப் பிராணிகளான நாய், பூனைக்கோ அல்லது ஆடு, மாட்டிற்கோ உணவு அளிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியிருக்கும். ஏன், உங்கள் வீட்டுத் தோட்டத்திற்கோ அல்லது பூஞ்செடிகளுக்கோ நீர் ஊற்றுவதற்கான ஒழுங்குகளைக் கூடச் செய்ய வேண்டியிருக்கும்.

(தொடரும்)


# கொடூர சித்திரவதைகளின் பின்னர் கொல்லப்பட்ட ரகர் வீரரின் கொலையாளி யார்?

(சென்றவாரத் தொடர்ச்சி)

இன்று புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் மற்றும் நீதி மன்ற அறிக்கையிற்கு சவால் விடுக்கப்படுகின்ற அதேவேளையில் அது தொடர்பில் அன்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸாரை பொறியிலிருந்து விடுவிக்கக்கூடாது. அவர்கள் அன்று தேவைக்கேற்ப விசாரணைகளை முன்னெடுத்துச்சென்றுள்ளனர். அன்று பொலிஸார். வாகன விபத்தின் பின்னர் எரித்திருக்கலாமென்றே அறிவித்தனர். ஆனாலும் வாகனத்தின் எப்பகுதியிலிருந்து தீ பரவ ஆரம்பித்ததென்பதை அவர்கள் கூற தவறிவிட்டனர். குறைந்தளவில் அச்சந்தர்ப்பத்தில் தஜீடின் மதுபானம் அருந்தியிருந்தாரா என்பதனையும் அவர்கள் குறிப்பிடவில்லை. இவ்வாறான கொடூர விபத்துக்களின் பொழுது பெரும் ஒலி எழும்பும். அவ்வாறான ஒலி தொடர்பாக பொலிஸார் சுற்றுப்புறச்சூழலில் மேற்கொண்ட விசாரணை அறிக்கைகள் எங்கே? விபத்து நிகழ்ந்த பொழுது பார்க் ரொண்டியில் அன்று தஜீடின் மாத்திரமா பயணித்தார்?

## சந்தேகம்

இவ்வனைத்து நிகழ்வுகளையும் சிறுபிள்ளைகளின் கதைகள் போன்று சித்தரித்தமையே கொலையாளிகள் தவறிழைத்த இடமாகும். விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து 1.5 கிலோமீற்றர் தூரத்திலிருந்து தஜீடினின் பணப்பை (purse) கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதுவும் ஒருசில நாட்களின் பின்னரே கண்டெடுக்கப்பட்டது. தஜீடின் அமர்ந்திருந்த வாகன இருக்கை அதிகளவில் பற்றியெறிந்திருந்த நிலையில் அவரது பணப்பை மாத்திரம் எப்படி வேறொரு இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது? தஜீடின் பணப்பையை வைத்திருப்பது கடினமாக இருக்கின்றதென எண்ணி அதனை வெளியே துக்கியெறிந்தாரா?



**“விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து 1.5 கிலோமீற்றர் தூரத்திலிருந்து தஜீடினின் பணப்பை (purse) கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதுவும் ஒருசில நாட்களின் பின்னரே கண்டெடுக்கப்பட்டது. தஜீடின் அமர்ந்திருந்த வாகன இருக்கை அதிகளவில் பற்றியெறிந்திருந்த நிலையில் அவரது பணப்பை மாத்திரம் எப்படி வேறொரு இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது?”**

தஜீடினின் மரணத்துடன் அனைத்தும் மண்ணோடு மண்ணாக புதைக்கப்பட்டுவிட்ட போதிலும் மேலே எழுப்பப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் இன்று வரையில் விடைகிடைக்கவில்லை. தஜீடின் இறந்துவிட்டார் எனவே, அவரது மரணத்தைப் பற்றி கதைப்பதற்கு வேறொன்றுமில்லையெனக் கூறி அவரது பெற்றோரும் அமைதியாகிவிட்டனர். இன்று வரையில் அவர்கள் அமைதி காக்கின்றனர்.


தஜீடின் இறப்பு மைத்திரி அரசாங்கத்தினால் மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. பாதிப்படைந்தோர் தொடர்பாக ஆஜராகும் சட்டத்தரணி மொஹெமட் மிஷ்பாக் அவர்களை நாங்கள் தொடர்பு கொண்ட பொழுது அவர் எங்களிடம், தற்பொழுது முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற விசாரணைகள் தொடர்பாக நான் கருத்து வெளியிட விரும்பவில்லையெனவும் ஆனால் இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கொலையெனவும் உறுதியாக தற்சமயம் கூறவியலுமென அவர் குறிப்பிட்டார்.

அப்படியென்றால் தற்சமயம் மிகவும் முக்கியமான நடவடிக்கைகளையே முன்னெடுக்க வேண்டும். அதாவது கொலையாளிகளைக் கைதுசெய்ய வேண்டும். அதற்காக இன்று பொலிஸார் பெரிய வலையினையே வீசுகின்றனர் என்பதை நாம் அறிவோம். தஜீடின் மரணம் தொடர்பாக இன்று 21 பேரிடம் பொலிஸார் வாக்கு மூலம் பதிவுசெய்துக்கொண்டுள்ளனர். அவ்வாக்கு மூலங்களில் முன்னைய வாக்குமூலத்துள் உள்ளடங்காத பல விடயங்களும் உள்ளன என்பதை கூறவேண்டும். இவ்விசாரணைகள் இன்னும் குறுகிய தூரம் மாத்திரமே முன்னெடுக்கப்படவேண்டும். அப்பொழுது அவர்கள் அனைத்தையும் வெளியிடுவார்கள். அப்பொழுது கொலை செய்தவர்களும் கொலை செய்ய உத்தரவிட்டவர்களும் கைதுசெய்யப்படுவார்கள்.

தஜீடினின் மரணத்தை அன்று விபத்தென கூறியவர்கள் தஜீடினின் கைக்கால்கள் உடைக்கப்பட்டிருந்தமையினை காணவில்லையா? அன்று பொலிஸார் ஏன் இவற்றையெல்லாம் மறைத்தார்கள்? அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். அன்றும் தஜீடினின் நான்கு பற்கள் கழட்டப்பட்டுள்ளன. இப்பல்வைத்தியர்கள் யார்? ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பற்களை கழட்டி, கொடூர சித்திரவதைகள் செய்து கொல்லும் முறையை வாகன விபத்தில் கொல்லப்பட்டுள்ளாரென கூறிய சூத்திரதாரி யார்? இதனையே மைத்திரி ஆட்சி வெளிப்படுத்த வேண்டும். துன்பத்திற்கு முகங்கொடுத்த தரப்பினருக்கு நீதி கிடைக்க வேண்டுமாயின் தஜீடின் கொலையாளியை சட்டத்தின் முன்பு நிலைநிறுத்த வேண்டும். இதுவே இதற்காக உரிய காலமாகும்.

**ஆக்கம் – டிரன் குமார பங்கமாராச்சி**
**தமிழில்: நட்டாஷா ராஜ்குமார்**
**நன்றி : ராவய (12.06.2015)**


## ரயில் போகாத தண்டவாளங்கள்....



இங்கு தான் குளிர் எழுதும்
இறுதி தண்டவாளங்கள் உள்ளன
இதற்கு அப்பால் தண்டவாளங்கள்
வரும் முன்னே
எல்லாமே அகற்றப்பட்டு விட்டன
ஆனாலும் இங்கு
கவிதைகள் எதுவும் வருவதில்லை.
தண்டவாளங்கள் வெறுமனேவுள்ளது
ரயில்கள் கடைசியில்
யாருமேயில்லாமல் வருகின்றது
ரயில் செல்லும் போது முதலில்
பயணிக்கின்றோம் ஆனாலும்
ரயிலில் சனம் சேர்ந்த பின்
எங்களை பற்றி யாரும்
கண்டுகொள்ளவில்லை
ஆனாலும்
ரயில் எங்களது பெயரிலேயே
ரயில் நகர்கிறது
வரும் போது எதுவுமே மிச்சமில்லை
செல்லும் போது எங்களைப் பற்றி
தண்டவாளம் பார்த்தாலும்
ரயில் மறந்து விடுகின்றது

எஸ்.பி.பாலமுருகன், பதுளை...

## நினைவெனும் உறவில்....



புன்னகையாய் சுழன்றடிக்கும் உன் சிரிப்பில்
சிக்கித் தடுமாறும் நான்
புன்னகை எனும் ரொக்கெட் அனுப்பி - என்
இதயத்தளத்தை வழித்தவளே
உன் நினைவுகள் என்ன...
அன்பா?
அம்பா?....
நீ வந்து தங்கி விட்டுச்
செல்வதற்கு - என்
இதயம் என்ன, வில்பத்து சரணாலயமா?
நிரந்தரமாகவே தங்கிவிடு,
என் இதயத்தில்

ஜெ.டிசாந்

# உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்

- மாத்தளை ரோகினி

இலங்கையில் பெருந் தோட்டத் தொழிற்துறை ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாகிறது. 1873 ஆம் ஆண்டு தேயிலை பயிர்ச் செய்கை முதன் முதலாக மத்திய மாகாணத்தில் லூல்கந்தலா என்ற தோட்டத்தில் பயிரிடப்பட்டது. தேயிலைக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பெருந்தோட்டத் தொழிற்துறையின் உற்பத்தியில் நேரடியாகப் பங்குகொண்ட தொழிலாளர்களைச் சம்பந்தப்படுத்தாமல் துரைமார்களின் மனைவிமார்கள் பங்குபற்றினார்கள்.

பெருந்தோட்டத் தொழிற்துறை ஆரம்பமும், இந்திய தொழிலாளர்கள் குடியேற்றமும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. தேயிலை உற்பத்திக்கு முன்பு கோப்பி பயிர் செய்கை 1824 ஆம் ஆண்டு மத்திய மாகாணத்தில் சிங்காப்பிட்டிய என்ற இடத்தில் பயிரிடப்பட்டது. காலப்போக்கில் இவைகள் அழிந்துவிட்டன. கொக்கோ பயிர் செய்கை 1950 இற்கு முன்பு முதன் முதலில் மத்திய மாகாணத்தில் கம்பளை மரி[illegible]வத்தை தோட்டத்தில் பயிரிடப்பட்டது. ஏனைய பகுதிகளில் சீதோசன நிலை[illegible]க்கேற்ப ரப்பர், தென்னை பயிரிடப்பட்டன. இத்துறையில் தன் ஊனையும், உயிரையும் மண்ணுக்கு அர்ப்பணித்து உற்பத்தி செய்தவர்கள் இந்திய வம்சாவளி தமிழ் தொழிலாளர்கள் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

பெருந்தோட்டத் தொழிற்துறை பிரித்தானியருக்கும் பிரித்தானிய கம்பனிகளுக்குமே சொந்தமாக இருந்தன. இத்தோட்டங்களில் தொழில் புரிய அமர்த்தப்பட்ட தமிழ் தொழிலாளர்கள் இக்கம்பனிகளின் அடக்குமுறைக்கு ஆளாகிப் பேச்சுரிமையும் மனிதவுரிமையும் மறுக்கப்பட்ட ஒரு ஜடமாக வாழ்க்கையை நடத்தினர். இந்த வாழ்க்கையை வரலாற்று வல்லுனர்கள் மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட இயந்திர வாழ்க்கைக்கு ஒப்பிட்டுள்ளனர்.

1947 ஆம் ஆண்டு இலங்கை நாடு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்பும் மலையகப் பெருந்தோட்டத் தொழிற்துறையிலுள்ள மக்களின் சமூகப் பொருளாதார அம்சங்கள் பிரித்தானிய கம்பனிகளிடமும்இலங்கைமுதலாளிமார்களிடமுமேதங்கியிருந்தன. அரசியல் சுதந்திரத்தின் மகிமையை உணராத வண்ணம் இம்மக்கள் அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர். தோட்டங்களில் துரைமார்களின் அடக்குமுறையும், பெரிய கங்காணிகளின் தலைமைத்துவமும் இம் மக்களை சிறையில் வாழும் கைதிகளைப் போன்று நடத்தப் பயன்பட்டன. இக்காலகட்டத்தில் தோட்டத்தை விட்டு வெளியேற்றுதல், சவுக்கடி தண்டனைகள் நிறைந்திருந்தன. இதன் சோக வரலாற்றை எழுதியவர்கள், 'ஆபிரிக்கா கண்டத்தில் இருள் சூழ்ந்த அடிமை நிலையினைப் பெருந்தோட்டத் தொழில் துறையிலுள்ள தொழிலாளர்கள் அனுபவித்து வருகின்றனர்' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மக்களின் வரலாறு மண்ணோடு மண்ணாகக் கலந்தவை. செழுமைக்கு உரமாக்கப்பட்டவர்கள். அவர்களின் எலும்புக் கூடுகள் மனிதர்களுக்கு வழிகாட்டும் பாதைகளாகக் காட்சியளித்தன. இலங்கையின் உண்மையான பொருளாதார வரலாற்றை ஆராயும் ஆய்வாளர்கள் இந்த மக்களின் எலும்புக் கூடுகளின் மேல் நின்றுதான் எழுத வேண்டும். அதுவே உண்மையான வரலாறாக இருக்க முடியும்.

இந்த நூற்றாண்டில் இந்த மக்களின் உழைப்பு, தியாகம் அனைத்தும் கூலிக்கு வந்த மக்களாக கூலித் தொழிலாளர்கள் என்ற கருத்தைப் பிரதிபலிக்கச் செய்கின்றன. இந்தப் போலி தத்துவத்தைப் புள்ளி விவரத்தோடு மூழ்கடித்து, சமூகம் இந்த நாட்டின் மீதும் , மண்ணின் மீதும் கொண்டுள்ள பற்றும், உயிர்ஜீவ நாடியாக இருக்கும் உழைப்பும் நாட்டின் சுதந்திரத்தைக் கட்டியெழுப்ப இம்மக்கள் ஆற்றிய பங்கும் பொன்னெழுத்துக்களால் வரலாற்றில் பதிக்கப்பட வேண்டியவையாகும்.

நாடு சுதந்திரம் பெற்றதோடு ஏற்பட்ட அரசியல் மாற்றம், தொழிற்சங்க நடவடிக்கைகள், விஸ்தரிக்கப்பட்டது. தொழிற்சங்கம் 1939 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தாக்கம் பெருந்தோட்டத் தொழிற்துறை சங்கத்தை தொழிலாளர்கள் ஸ்தாபிக்கவும் உழைப்புக்கேற்ற ஊதியம், மனித ரீதியான உரிமைகள், அடக்குமுறைக்கெதிரான சிந்தனைகள் போராட்டங்களாக வெடித்தன.

இந்த ரீதியில் 1939 ஆம் ஆண்டு தோட்டங்களில் தொழிற்சங்கத்தை ஸ்தாபித்து தொழிலாளர்களின் உரிமைக்குப் போர் முரசு கொட்டினர். இதற்கு எதிராகத் தோட்ட முதலாளிகள் பொலிஸாரின் துணை கொண்டு அடக்க முற்பட்டனர். இதில் பலியான தொழிலாளர்கள்தான் எத்தனை! எத்தனை! இப்போராட்டத்தில் தங்களின் உயிர்களைத் தியாகம் செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா.

இந்தவகையில்இலங்கைபெருந்தோட்டத்தொழிற்துறையில் எழுந்த போராட்டங்களையும் அப்போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த தொழிலாள தியாகிகளையும் இங்கே நாம் நினைவு கூர்வது சாலப் பொருந்தும்.

**“பெருந்தோட்டத் தொழிற்துறை பிரித்தானியருக்கும் பிரித்தானிய கம்பனிகளுக்குமே சொந்தமாக இருந்தன. இத்தோட்டங்களில் தொழில் புரிய அமர்த்தப்பட்ட தமிழ் தொழிலாளர்கள் இக்கம்பனிகளின் அடக்குமுறைக்கு ஆளாகிப் பேச்சுரிமையும் மனிதவுரிமையும் மறுக்கப்பட்ட ஒரு ஜடமாக வாழ்க்கையை நடத்தினர். இந்த வாழ்க்கையை வரலாற்று வல்லுனர்கள் மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட இந்திய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுள்ளனர்.**

## மலையகப் போராட்டத் தியாகிகளின் வரலாறு

# அமெரிக்காவில்.... In America

## அமெரிக்காவின் நிஜத் தோற்றம்

**- ஜெ. பிஸ்மி**

உலகத் தரம் வாய்ந்த சினிமா



ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றவர்களின் ஆதர்ஷ உலகம் அமெரிக்கதான். அவர்களின் மனதில் ஏற்பட்ட அமெரிக்கா குறித்த கனவும், பிரமிப்பும் அளவிட முடியாதவை. கொளுத்தும் வெயிலையும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் விசாவுக்காக, அமெரிக்கத் தூதரகங்களின் வாசல்களில் காத்துக் கிடக்கும் கூட்டமே இதற்கான சாட்சி! அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள், அடுக்கடுக்கான கேள்விகள், மனித உரிமையை மதிக்காத பாதுகாப்புசோதனைகள் என அத்தனை அவமானங்களையும் அத்துமீறல்களையும் சகித்துக் கொள்பவர்களால் மட்டுமே அமெரிக்க மண்ணை மிதிக்க முடியும். அல்லது அருகில் அமைந்த கனடா போன்ற நாடுகளின் வழியே கள்ளத்தனமாக எல்லை தாண்டுவதே மாற்றுவழி.

இத்தனை இன்னல்களை எதிர்கொண்டு, ஏற்றுக் கொண்டு அங்கே செல்லுமளவுக்கு அப்படி என்னதான் இருக்கின்றது. அமெரிக்காவில்? தூரப்பார்வைக்கு செல்வத்தில் கொழிக்கும் தேசமாய் தெரியும் அமெரிக்கா உண்மையில் அப்படித்தான் இருக்கிறதா? 'இல்லை' என்றோடு அமெரிக்காவின் நிஜத் தோற்றத்தை தோலுரிக்கிறது. 'அமெரிக்காவில்' (In America)என்ற திரைப்படம் 2003 இல் வெளியான இப்படம், கனடா வழியே கள்ளத்தனமாக அமெரிக்காவிற்குள் நுழைந்த ஒரு குடும்பத்தின் கஷ்ரங்களை விபரிப்பதன் மூலம், அமெரிக்காவின் மறுமுகத்தையும் வான் உயர்ந்த கட்டடங்களைப் போலவே வறுமையும் அங்கே நீக்கமற நிறைந்திருக்கிறது என்ற உண்மையையும் உலகின் பார்வைக்கு அம்பலப்படுத்துகிறது.

இதில் சுவாரஸ்யமான விடயம்... இப்படத்தை இயக்கிய ஜிம் ஷெரிடியனும் பல வருடங்களுக்கு முன் கள்ளத்தனமாக 'அமெரிக்காவில்' அடியெடுத்து வைத்தவர் என்பதுதான். தன் இரண்டு பெண் குழந்தைகளுடன் அமெரிக்கா வந்தபோது ஜிம் ஷெரிடியன் அனுபவித்த அவஸ்தைகளையே 'அமெரிக்காவில்...' படத்தின் கதையாக்கி இருக்கிறார். உண்மைகள் படைப்புகளாக்கப்படும்போது அந்தப் படைப்பு உயிர்ப்புத் தன்மை பெற்றதாகிவிடும் என்பதை அமெரிக்காவில் திரைப்படமும் நிரூபித்திருக்கிறது. எளிமையான, யதார்த்தமான படைப்புக்கு எப்போதும் தோல்வியில்லை என்பதையும்....!

ஜானி மற்றும் சரா ஐரீஷ் நாட்டைச் சேர்ந்த தம்பதி. தங்களின் கடைக்குட்டி மகனை இழந்த சோகத்திலிருந்து மீள வேண்டும் என்கிற எண்ணத்தில் இரண்டு பெண் குழந்தைகளுடன் கனடா வழியே கள்ளத்தனமாக நியூயோர்க் நகரத்தில் குடியேறுகிறார்கள். பதினொரு வயது கிறிஸ்டி, ஆறு வயது ஏரியல் என இரண்டு பெண் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு அமெரிக்காவில் வாழ்க்கை நடத்துவது அத்தனை சுலபமாக இல்லை. அவர்கள் குடியிருக்கும் அழுக்கான அடுக்குமாடி குடியிருப்பே அவர்களுக்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

விலைமாதர்களும், போதை அடிமைகளும், எயிட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்களும் அந்தக் குடியிருப்பில் ஜானியின் குடும்பத்துடன் நட்புப் பாராட்ட கூட ஆளில்லை. ஆரம்பத்தில் கிறிஸ்டியும் ஏரியலும் அக்கம்பக்கத்து வீடுகளின் கதவுகளைத் தட்டி அறிமுகப்படுத்திக் கொள்ளவும் அவர்களோடு பழகவும் துடிக்கிறார்கள். பலரும் பாராமுகம் காட்ட, மேட்யோ என்ற சர்ரியலிஸ்ட் ஓவியனோ அக்குழந்தைகளுக்கு அச்சம் தரும் தோற்றம் கொண்டவனாகவும் காரணமில்லாமலே கோபத்தில் கத்துகிறவனாகவும் இருக்கிறான். தனிமை விரும்பியான அவன் ஒரு எயிட்ஸ் நோயாளி!

குழந்தைகளின் பிரச்சினை இப்படி என்றால், ஜானி, சராவின் தலையாய பிரச்சினை குடும்பம் நடத்தத் தேவையான வருமானமில்லாதது. சினிமாவில் வேலை தேடுகிறான் ஜானி. அது அத்தனை சுலபமானதாக இல்லை. சாப்பாட்டுக்கே பிரச்சினையாகிற போது, சரா ஐஸ்கிறீம் பார்லர் ஒன்றில் வேலைக்குச் சேருகிறாள். ஜானி நிலையற்ற வேலைகளை செய்ய ஆரம்பிக்கிறான். வேலை நிமித்தம் வெளியே சுற்றிக் கொண்டிருக்க வேண்டியிருப்பதால் தன் குழந்தைகளுக்குத் தேவையான நேரத்தைக் கூட ஜானியால் ஒதுக்க முடியவில்லை. அமெரிக்க வாழ்க்கை பற்றிய கனவுகளோடு வந்த அக்குழந்தைகள் தாய், தந்தை இருவரும் அருகில் இல்லாததால் ஏமாற்றம் அடைகின்றனர்.

தந்தையிடம் கிடைக்காத அன்பை அக்குழந்தைகள் தன்னிடம் தேடுவதை ஒரு கட்டத்தில் புரிந்து கொள்கிறான் மேட்யோ. அக்குழந்தைகளிடம் அன்பு செலுத்த ஆரம்பிக்கிறான். அவர்களுக்கிடையே பிறக்கும் நேசமும் நெருக்கமும் மனதைத் தொடுபவை என்றால் படத்தின் முடிவு பார்வையாளர்களைக் கதறடிக்கும். மேட்யோவின் மரணம் அக்குழந்தைகளை எந்தளவுக்குப் பாதிக்கிறதோ அதே பாதிப்பை நம்மையும் உணர வைத்திருக்கிறார் இயக்குநர். எனினும் எதிர்காலம் குறித்த நம்பிக்கையோடு படம் முடிகிறது.

ஜானி - சராவின் மூத்த மகள் கிறிஸ்டியின் பார்வையில் கதை சொல்லப் படுவது மட்டுமல்ல. 'அமெரிக்காவில்' திரைப் படத்தின் கதை சொல்லியாகவும் அவளே இருக்கிறாள். படத்தின் தொடக்கத்திலிருந்து ஹேண்டிகேம்கேமராஒன்றை வைத்திருக் கிறாள் கிறிஸ்டி. அதைக்கொண்டு தன் வீட்டில் நடக்கும் சம்பவங்களையும் தன்னைச் சுற்றி நிகழும் சம்பவங்களையும் படம் பிடித்துக் கொண்டே இருக்கிறாள். அவளால் படம் பிடிக்கப்படும் காட்சிகளே படத்திலும் காட்சிகளாக்கப்பட்டிருக்கின்றன.

இயக்குநர் கையாண்ட இந்த உத்தியின் காரணமாய் கதையில் கிறிஸ்டிக்கு கூடுதல் முக்கியத்துவம் இயல்பாய் அமைந்துவிட்டதோடு கதையை நகர்த்திச் செல்லும் பொறுப்பும் அவள் முதுகில் சுமத்தப்பட்டிருக்கின்றது. அதை மிக அற்புதமாய் செய்திருக்கிறாள் கிறிஸ்டி பாத்திரத்தில் நடித்திருக்கும் சரா. அவளது தங்கையாய் ஏரியல் பாத்திரமேற்றிருக்கும் எம்மா போல்கரின் நடிப்பும் நினைவை நிறைக்கும். இருவருமே நிஜத்திலும் அக்கா தங்கைகள் என்பது கூடுதல் செய்தி.

அதனாலோ என்னவோ இருவரது நடிப்பில் அப்படி ஒரு யதார்த்தம். அன்னியோன்யம்! திரைப்படங்களில் மிக அபூர்வமாக தென்படும். அம்மாவாகத் சமந்தா மார்டன்! இவரது நடிப்பும், மேத்யோவாக வரும் டிஜமோனின் நடிப்பும் கூட மறக்க முடியாத வகையில் அமைந்திருக்கிறது.

ஏற்கனவேசொன்னதுபோல்'அமெரிக்காவில்' திரைப்படம் அங்கு குடியேறிய வந்தேரிகளின் கதையாக இருந்தாலும் அது நம் வாழ்க்கை அனுபவங்களையும் உரசிச் செல்கிறது. அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளில் பல நாம் நம் வாழ்க்கையில் கடந்து வந்த கணங்கள். அதுவே இத்திரைப் படத்தை நமக்குப் பிடித்தமானதாக்கும் அம்சங்களில் ஒன்றாய் இருக்கிறது.

(சென்றவாரத் தொடர்ச்சி)

பெரிய வீடெல்லாம் வருமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த நிரோவிற்கு ஏமாற்றமாக இருந்தது. கமலத்திற்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். கமலத்தின் பரபரப்பான விழியசைவு அதனைத் தெரிவித்தது. கூரையிழந்த பாட சாலைகளும் தரைமட்டமான வீடுகளும் வடுக்களைச் சுமந்து கொண்டிருந்த மரங்களும் வாகனத்தின் வேகத்திற்கேற்ப, பின் வாங்கிக்கொண்டிருந்தன. அத்தனை காட்சிகளும் வன்னியில் நடந்த பெரும் சமருக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தன.

“ஏனம்மா! வீடெல்லாம் இடிஞ்சு போய்கிடக்குது? ஆக்களெல்லாம் எங் கம்மா போயிருப்பாங்கள்....”

“வன்னியில பெரிய சண்டை நடந்தது என்று சொல்லுவினமே! இதுதான்ரா நிரோக்குட்டி! அந்தச் சண்டை நடந்த இடம். எங்கட பேரம்பலம் மாமாவின்ர மகன், பெரிய சண்டையில வீரச்சாவடைஞ்சதென்று சொல்லிச்சினமே, இந்த இடத்திலதான்”

“எங்கட சீனுவின்ர அண்ணா! என்னம்மா”

“ஓமடா..”

“எங்கட அண்ணாவும் இந்தச் சண்டைக்கு வந்திருப்பார், என்னம்மா...”

“இம்...”

கமலம். ஒவ்வொரு இடமாக வரவர நிரோவுக்குச் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

நிரோவின் குட்டிக்கேள்விகளும் கூடிக்கொண்டே இருந்தன. எதிரியின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றால், கமலம், தங்களைப் போராளி குடும்பமெனக் காட்டிக் கொள்ளாமல் நிரோவின் கேள்விகளைத் திசை திருப்பியிருப்பாள்.

பேருந்து கண்டி வீதியிடம் விடைபெற்றுக்கொண்டு சிறுவீதியில் இறங்கி ஊர்களைத் தாண்டிச் செல்கின்றது. சில்லுகளின் வேகத்திற்கு அந்த வீதி தடையாகவே இருக்கிறது.

வட்டகச்சியை, அழகுபடுத்தும் கமுகு மரங்களும் மாமரங்களும் வீரோப்புடன் வரவேற்றன. பள்ளங்களைத் தரிசித்தவாறு, பேருந்து ஊர்ந்து கொண்டிருக்கின்றது. பேருந்தின் வேகமும் மகனைப்பார்க்கும் கமலத்தின் ஆவலின் வேகமும் மாறி மாறிப் போட்டிபோட்டன.

“அம்மா...அது..”

“அதுதான்ரா நிரோக்குட்டி துயிலுமில்லம்....”

“என்னவடிவாய் இருக்குதம்மா! பாத்திட்டுப் போவமோ....”

“நாளைக்கு நாங்கள் அண்ணாவோடு வந்துபாப்பம்..”

மூங்கிலாற்றின் சலசலப்பும், அதனிடையே மூங்கில்களின் அசைவும் ஓசையும் பறவைகளின் ஜாலங்களும் மாலைப்பொழுதை மகிழ்வித்தன.

பேருந்து புதுக்குடியிருப்பை வந்தடைந்த திருப்தியோடு, நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தி அமைதியாய் நின்றது. கமலமும் நிரோவும் இறங்கி, திருமலைத் தொடர்பகத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கிறார்கள். கமலத்தின் நடையின் வேகத்திற்கு நிரோவின் பிஞ் சுக்கால்களால் ஈடுகொடுக்க முடிய

# சிறுகதை

# விழிகளுக்காய் ஏங்கும் கண்ணீர்



கருமணி

வில்லை. கையைப்பற்றிக் கொண்டு நடக்கத் தொடங்கினாள். அந்தப் பெண் சொன்ன அடையாளத்தின்படி நீலக் கேற்றை நெருங்கிக் கொண்டிருக்கின்றார் கள்.

“அம்மா, வாங்கோ!”

அந்தப் போராளியின் வரவேற்பு, பாதிக்களைப்பைப் போக்கியிருக்க வேண்டும் நிரோவின் நெற்றியில் இருந்து கன்னத்தை நோக்கி ஓடி வந்த வியர் வைத்துளியைக் கமலம் தனது சேலைத் தலைப்பால் ஒற்றி எடுக்கிறாள்.

“யாரையம்மாபாக்கப்போறியள்?

“என்ர மகன், இயக்கப் பெயர் கர்ணன்”

“எந்தப் பிரிவென்று...?”

“அது தெரியாது தம்பி”

**கூரையிழந்த பாடசாலைகளும் தரைமட்டமான வீடுகளும் வடுக்களைச் சுமந்து கொண்டிருந்த மரங்களும், அத்தனை காட்சிகளும் வன்னியில் நடந்த பெரும் சமருக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தன.**

சில விநாடிகள் யோசித்த அந்தப் போராளி”

“வீட்டுப் பெயர் என்னம்மா?”

“தர்மன்”

“பெயர்களைப்பாத்தா ஆள் கொடை வள்ளலாய்த்தான் இருப்பார் போல”

சிரித்துக்கொண்டே, “இருங்கம்மா வாறன்” சொல்லிவிட்டு அந்தப் போராளி நடக்கிறான்.

“தங்கச்சி என்ன பேர்?”

தேநீர் கொண்டு வந்த போராளி, நிரோவின் மழலைப் பேச்சில் மூழ்கியிருந்தான். கமலம் வாங்கிக் கொண்டுவந்த அப்பிளை, அங்கு நின்ற போராளிகளுக்கும் கொடுத்துவிட்டு அந்த அறையில் தொங்கவிடப்பட்டிருந்த மாவீரர் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தப் போராளி திரும்பி வந்தான்.

“வீட்டுப்பெயர் தர்மன் தானே!”

“ஓம்.. தம்பி”

கமலத்திற்கு குழப்பமாக இருந்தது. மனதிற்குள் ஆண்டவனைப் பிரார்த்தித்தாள்.

“அடுத்துக்கிடைக்கப்போகும்பதில் மகிழ்ச்சியானதாக இருக்கவேண்டும்”

அவளின் மனம் அலைப் போர் வைக்குள் சிக்கி மீள முடியாமல் தவிர்த் தது. படங்களைப் பார்த்துக்கொண்டிருந் தவளுக்கு ஒரு உருவம் நடந்து வருவது படத்தில் தெரிய திரும்பிப் பார்த்தாள். அதே போராளி வந்துகொண்டிருக்கின் றான். முன்பு வந்ததைப் போல் அவ சரத்தைக் காணவில்லை.

“மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல ஏன் தயங்க வேண்டும்”

கமலத்தின் மனம் சக்கரம் போல் சுழன்று கொண்டது. அந்தப் பதிலில் தான் அவளின் உயிரே தங்கியிருப்பது போல் தவித்தாள். அந்தப் போராளி குறிப்புப் புத்தகப் பக்கங்களைத் தட்டியவாறு வந்து கொண்டிருக்கின்றான். அவள் இதயத்துடிப்பு வேகம் அதிகரிப்பதை உணர்ந்தாள்.

“என்ன தம்பி, தம்பி வருவானோ?” திடீரென நிமிர்ந்தவன்.

“ஓம்... அம்மா... இருங்கோ.. பதினைந்து நிமிடத்தில் வருவாரென்று அறிவிச்சிருக்கினம்”

“அப்பாடா...”

என்று பெருமூச்சுவிட்டாலும், மனம் திருப்தி அடையவில்லை. வாகனச் சத்தம் கேட்கும் போதெல்லாம், அவளை அறியாமல் எட்டிப்பார்ப்பாள்.

“அம்மா, அண்ணா வரல்லையோ..?”

“வருவான்”

‘நீச்..’ என்ற சத்தத்துடன் மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. ஓடிக்கொண்டு வந்த போராளி இறங்கி, ஸ்ராண்ட் தட்டி நிறுத்துகின்றான். பின்னுக்கிருந்த போராளி இறங்கி அவனுக்காகக் காத்துக்கொண்டு நின்றான். இருவரும் கையைப்பிடித்தபடி கதைத்துச் சிரித்துக் கொண்டுவருகிறார்கள்.

“இதில் ஆரம்மா அண்ணா?”

கமலம் நன்றாகப் பார்க்கிறாள்.

ஓ... அவன்தான். அதே சிரிப்பு, நடையில் அதே வேகம். கண்ணாடி போட்டுக்கொண்டு வாறானே”

ஓடிப்போய்க் கையைப்பிடித்த நிரோ...

“ஏன் அண்ணா எங்களைப் பார்க்க வரேல்ல...”

“காய்.. என்ர நிரேக்குட்டியும் வந்திருக்கு”

அவளின்ர கையைப் பற்றிக் கொண்டவன், அந்தப் பிஞ்சுக் கன்னங்களில் முத்தமிட்டான். அவனின் கை அவளின் கன்னங்களில், காதுகளில், மூக்கில் ஓடிக்கொண்டிருந்தது. கமலம் மகிழ்ச்சி தாளாமல் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்தாள். வருடலின் ‘ஏக்கம்’ புரியாத நிரோ.

“அண்ணா, உங்களுக்கொரு சாமான் கொண்டு வந்திருக்கிறன் எனச் சிரித்தபடி தோள் பையை நோக்கி ஓடி னாள்.

“அம்மா, என்ன எடுக்கப் போறாள்?”

“அவள் பள்ளிக்கூடத்தில பரிசு வாங்கேக்க பிடித்த போட்டோ கொண்டு வந்திருக்கிறாள். உனக்குக் காட்ட...”

“அம்மா, நீங்கள்கூட இந்தக் கறுத்தக் கண்ணாடியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லையா..?” என மனதிற்குள் விம்மத் தொடங்கினான். தர்மனின் மனதிற்குள் ஒரு பூகம்பம். ஏதும் அறியாத அத்தாயின் மனதிற்குள் பேரின்பம். படத்துடன் ஓடிவந்த நிரோ.

“அண்ணா கண்ணாடியைத் தந்திட்டு இந்தப்போட்டோவைப் பாரு ங்கோ” கண்ணாடியைக் கழற்றி எடுத்த நிரோ, அண்ணாவின் அசைவற்ற விழி களை உற்றுப்பார்க்கிறாள்.

“அம்மா! அண்ணாவுக்கு என்ர கண் மாதிரி எண்டு பொய்சொல்லிப் போட்டியள்”.. கமலத்தின் விழிகள் அகல ஓ.. என வந்த அழுகையை அடக்கிச் சுவருடன் சாய்ந்து கொள்கிறாள்.

“இரண்டு கண்களுமா...?”

என ஏங்கிய உதடுகள் சேரமறுக்க,வார்த்தைகள் தடுமாறின.

(முற்றும்)

(லண்டன்.....
05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த முயற்சியைக் கைவிட்டு தன்னிச்சையாகவும் இரகசியமாகவும் செயற்படுவதை அனுமதிக்க முடியாது.

நல்லிணக்கம் என்ற பெயரில் மூடி மறைத்து ஓர் இனத்தையே ஏமாற்றுகின்ற ஒரு வேலைத் திட்டத்திற்கு நாங்கள் துணை போகக் கூடாது என்ற அடிப்படையில் இவ்விடயத்தை இன்று மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். இறுதியாக அழைக்கப்பட்ட நான்கு தரப்பும் தம்முடன் இணைந்து செய்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் தாம் எம்மை அழைத்ததாகக் கூறினார்கள்.

இனிமேலும் மக்களை ஒரு மாயைக்குள் வைத்து ஏமாற்ற முடியாது. கூட்டமைப்பின் உண்மையான நிகழ்ச்சி நிரலை அம்பலப்படுத்தாமல் இருப்பது எம்மைப் பொறுத்தவரையில் நாம் மக்களுக்கு செய்யும் பச்சைத் துரோகமாகவே பார்க்க வேண்டியிருக்கின்றது.

மேலும், தமிழர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை எனவும் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம் எனவும் மக்கள் மத்தியில் கூறிக் கொள்பவர்கள் எழுத்து மூலமாக இதற்கு ஒப்பமிட இன்று வரை மறுத்துவருகின்றனர். அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றிற்குக் கூட இணங்கத் தயாரில்லாதவர்களாக இருந்து கொண்டு இரகசியச் சந்திப்புக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பேச்சுவார்த்தை இரகசியமாக கொழும்பில் நடந்திருக்கலாம். வெளிநாட்டில் போய் நடத்துவதற்கு எந்த தேவையும் கிடையாது. ஆனால் வெளிநாட்டில் நடத்தியதிற்குக் காரணம் இந்தப் பேச்சுவார்த்தை முக்கியத்துவமானது என உலகிற்குக் காட்டுவதற்கே எனக் கூறுகின்றனர்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய அனைத்துத் தரப்புக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய பலரும் இப் பேச்சவார்த்தையினை முற்று முழுதாக நிராகரிக்கின்றனர்.

சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கொரு நிரந்தரத் தீர்வு கொடுக்க வேண்டும் என்ற விடயத்தில் முற்றுமுழுதாக எதிராகத்தான் இருக்கிறார்கள். எனவே, இதனைப் புரிந்துகொண்டு அந்த மக்களுடன் நேரடியான விவாதத்திற்குச் செல்ல வேண்டும்.

தலைமைகள் மட்டத்தில் செய்கின்ற இரகசிய முடிவுகளை தமிழ் மக்களாய் இருக்கலாம் சிங்கள மக்களாய் இருக்கல்ாம் எவரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

உலகில் உள்ள எந்தவொரு நாட்டிலேயேயும் இனப்பிரச்சனைத் தீர்வில் அம்மக்களை முழுமையாக அரவணைத்துக் கொண்டு போன முயற்சிதான் வெற்றி பெற்றுள்ளது. சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே பாரிய இடைவெளி உள்ளது. எனவே, நாம் பகிரங்கமாக உண்மையான பேச வெளிக்கிட்டால் மட்டுமே முரண்பாட்டை படிப்படையாகக் குறைக்க முடியும்.

ஆனால், சிங்கள மக்கள் கோபிப்பார்கள், தமிழ் மக்கள் கோபிப்பார்கள் என்பதற்காகப் பேசாமல் இருப்பதும் இரகசியமாகச் செயற்படுவது ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இரகசியமாகச் செயற்படுவதற்கு நாங்கள் துணை போக மாட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய எமக்குத் தெரியும். தெரிந்தபடியால் நாம் வெளியேறினோம்.

தேர்தல் காலத்தில் பிரபாகரன் மாவீரன், புலிகள் விடுதலைப் போராளிகள் என்றும், 13ஐ தாம் தீர்வாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் பேசினார்கள். ஆனால் தேர்தல் முடிந்த மறுநாள் 77ம் ஆண்டில் கிடைத்ததை விடவும் மகத்தான ஆணை என்றும் இந்த ஆணை 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தத்தான் மக்கள் தமக்குக் கொடுத்தார்கள் என்றும் கூறினார்கள். அது மட்டுமன்றி புலிகளைப் பயங்கரவாதிகள் என்கிறார்கள். புலிகளையும் மீண்டும் போர்க்குற்ற விசாரணைக்கு உள்ளாக்க வேண்டும் என்கின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களைப் பொறுத்தவரை பகிரங்க விவாதம் ஒன்று நடைபெற்று மக்களுடைய கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுத் தீர்வு காணப்பட வேண்டும்.

மக்களுடைய பலத்தை பயன்படுத்தி எடுக்கிற முயற்சிதான் சர்வதேசம் மதிக்கிறதாக அமையும். இவ் இரகசிய பேச்சுவார்த்தையினை நாம் காலம் தாழ்த்தி வெளியிட்டமைக்கான காரணம் எங்களைப் பொறுத்தவரை கருத்து தெரிவிக்கின்ற போது அது வெறுமனே ஒரு தரப்பைக் குறை கூறும் கருத்தாக இருக்க முடியாது. உறுதிப்படுத்துவதற்கான பல முயற்சிகள் எடுத்த பின்புதான் வெளிப்படுத்துகின்றோம்.

நாங்கள் அவசரப்பட்டுக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில்லை. கூட்டமைப்பிலிருந்து அன்று வெளியேறுவதற்கு முன்னரும் ஒரு முறைக்கு ஆயிரம் முறை யோசித்தே முடிவெடுத்தோம்.

20 வது திருத்தம் என்ற தேர்தல் முறையை மாற்றுகின்ற விடயம் இன்று நேற்று தொடங்கியது அல்லது 2004 ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு தரப்பினரிடையே தேர்தல் முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற கருத்து மேலோங்கி உள்ளமையினை விளங்கிக் கொள்ள வேண்டும்.

விருப்பு வாக்கெடுப்பு என்ற விடயம் கட்சிக்குள்ளேயே பலத்த முரண்பாடுகளை ஏற்படுத்திக் கட்சிக்குள்ளேயே போட்டியை ஏற்படுத்தி பிரித்தாளுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதாகும். மேலும், ஒரு கட்சி தனித்து, அரசாங்கத்தினை ஸ்திரத்தன்மையாக வைத்திருக்க முடியாத நிலைமை உருவாக்கியுள்ளது.

தமிழ், முஸ்லிம் கட்சிகளுடைய பாராளுமன்ற ஆசனங்களில் தங்கியிருக்காது, சிங்களம் அல்லாத எந்தவொரு கட்சியினுடைய ஆதரவைப் பெறத் தேவையில்லை என்ற நிலைமையை உருவாக்குவதே இதன் திட்டம். இதனால், சிங்கள பௌத்த தேசிய வாத நிகழ்ச்சி நிரலை எந்த விதமான தடையும் இல்லாமல் கொண்டு போகலாம் என்பதே அவர்களின் உண்மையான நோக்கமாகும்.

தமிழ் பேசும் மக்களினுடைய பேரம் பேசக் கூடிய ஆற்றலை, பலத்தை அழிக்கின்ற நோக்கோடு இம்முறை செயற்படுகின்றது.

பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு நிலைமை இருந்தால் இந்தத் தேர்தல் முறைக்குத் தாம் தயார் என்ற கருத்தினைஒருசிலமட்டத்தில்முன்வைக்கப் படுகின்றது. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை பொறுத்தவரையில் பிரச்சினை என்பது பிரதி நிதித்துவத்தினுடைய எண்ணிக்கையில் இல்லை. தமிழ் பேசும் அரசியல் கட்சிகளினுடைய பலத்திலே தங்கத் தேவையில்லை என்ற நிலைமை உருவாக வேண்டும் என்பதுதான் அவர்களுடைய உண்மையான நோக்கம்.

இன்றைக்கு இருக்கக் கூடிய பேரம் பேசும் பலத்தை அழிக்கப் போகிறார்கள். ஆகக் குறைந்த பட்சம் ஒரு நிரந்தரத் தீர்வு எட்டப்பட்டு எம் மக்கள் நிம்மதியாகத் தமது பிரதேசத்திலேயே வாழ, எமது பிரச்சினைகளை நாமே தீர்க்கக் கூடிய வகையில் ஒரு நிலைமை இருக்க வேண்டும் என்பதுதான் எம் நிலைப்பாடு.

# நூல் அறிமுகம்

## சமூக இலக்கியத் தளங்களில் படைப்புக்களும் செயற்பாட்டாளர்களும்

**ஆசிரியர்** – லெனின் மதிவானன்
**வெளியீடு** - உயிர்மெய் பதிப்பகம்
**விலை** - ரூ.500.00




மலையகச் சமூக ஆய்வாளர் லெனின் மதிவானம் "சமூக இலக்கியத் தளங்களில் படைப்புகளும் செயற்பாட்டாளர்களும்" என்ற தலைப்பில் ஒரு நூலைக் கொண்டு வந்திருக்கிறார். உயிர்மெய் பதிப்பகம் அதனை நூலாக வெளியிட்டிருக்கின்றது. மொத்தம் 142 பக்கங்களில் நூல் வெளி வந்திருக்கின்றது. பேராசிரியர் மா.கருணாநிதி முன்னுரை ஒன்றையும் தந்திருக்கின்றார். கடந்த 2 வருடங்களாக லெனின் மதிவானம் எழுதிய கட்டுரைகளே நூலாக வெளிவந்திருக்கின்றது. சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் முக்கிய வகிபாகத்தை ஏற்பது சிறுகதைகளா? அல்லது நாவல்களா? அல்லது வேறு வடிவங்களா? என்ற வாதத்தில் லெனின் மதிவானன் சிறுகதைகளே ஏற்றிருப்பதாகப் பேராசிரியர் மா.கருணாநிதி குறிப்பிடுகின்றார்.

நமது நாட்டில் முதன்முறையாக மக்களின் நலன்களிலிருந்து அன்னியப் படாமல் பேரினவாத ஒடுக்குமுறையை அரசியல் அரங்கில் இனங்கண்டு ஸ்தாபன ரீதியாக நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்கள் நடேஸ் ஐயர் தம்பதிகளாவர் என என்னுரை என்ற பகுதியிலேயே லெனின் மதிவானன் குறிப்பிடுகின்றார். இவர் இதனை மலையகத்தை மையப்படுத்திக் கூறியிருக்கின்றாரா அல்லது முழு இலங்கையையும் மையப்படுத்திக் கூறுகின்றாரா என்பது தெரியவில்லை. தோழர் ஏப்ரகாம் சிங்கோ சிவனு லட்சுமணனை நினைவு கூரல், மூசி கந்தையாவின் நிஜங்களின் சத்தம், மலையக சமூகத்தின் நினைவுப்பதிவுகள், மலையக தேசியம் பற்றிய தோழர் இளஞ்செழியனின் சமூக நோக்கும் பங்களிப்பும், மலையகத் தேசியத்தை வரையறுப்பதில் ஏற்படும் பிரச்சினைகளும் சவால்களும், கே.ஆர்.டேவிட்டின் சிறுகதைத் தொகுதிகள் ஒரு மதிப்பீடு, தெணியானின் ஒடுக்கப்பட்டவர்கள் ஒரு சுருக்கமான விமர்சனக் குறிப்பு, அமரர் பிரேம்ஜி ஓர் அமைப்பாக்கவாதி, கைலாசபதி பற்றி மீள்பார்வை, கே.ஏ.சுப்பிரமணியம் சில பதிவுகள், ஜீவநதி நேர்காணல் என்கின்ற உபதலைப்புக்களில் கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன.

இவரது கட்டுரைகளில் "மலையகத் தேசியத்தை வரையறுப்பதில் ஏற்படும் பிரச்சினைகளும் சவால்களும்" என்ற கட்டுரை மிகுந்த கவனத்திற்குரியதும் விவாதத்திற்குரியதும் ஆகும். லெனின் மதிவானன் அதில் மலையக மக்கள் மலையகத் தமிழரா? அல்லது இந்திய வம்சாவளித் தமிழரா? எவ்வாறு அடையாளப்படுத்துவது என்ற விவகாரத்தைக் கிளப்புகின்றார். இறுதியில் மலையகத் தமிழர் என அடையாளப்படுத்துவதையே அவர் ஏற்றுக் கொள்கின்றார்.

எனினும் மலையகத் தேசியத்திற்குள் யார் யாரை உள்ளடக்குவது என்பதில் வடக்குக் கிழக்கில் குடியேறிய மலையக வம்சாவளியினரையும் அதில் உள்ளடக்க வேண்டும் எனக் கூறுகின்றார். அது பொருத்தமானதாகத் தெரியவில்லை. தற்காலிகமாக குடியேறியவர்களை வேண்டுமானால் மலையக தேசியத்திற்கு உள்ளடக்கலாம். ஆனால் நிரந்தரமாகக் குடியேறியவர்களை தமிழ்த் தேசியத்திற்குள் உள்ளடக்குவதேபொருத்தமானது. அப்போதுதான் இசைந்து வாழக் கூடிய நிலை அவர்களுக்கு ஏற்படும்.

இதேபோல் மலையகத்தில் நிரந்தரமாகக் குடியேறியுள்ள வடக்கு கிழக்குக்குத் தமிழர்கள் மலையகத் தேசியத்திற்குள் தம்மை இணைத்துக் கொள்வதே பொருத்தமானதாக இருக்கும்.

இதைவிட தேசியம் என்பது எப்போதும் நிலம் சார்ந்தது. எனவே மலையகத் தேசியத்திற்குள் அடக்கும் நிலப்பரப்பு எது என்பதையும் விவாதத்திற்கு எடுக்க வேண்டும். மலையக சமூக ஆய்வாளர் காதர் மத்திய, ஊவா, சம்ரகமுவ மாகாணங்களில் மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களை இணைத்து அதுவே மலையகத் தேசியத்திற்குரிய நிலம் எனக் கூறுகின்றார். வட கிழக்கு கூறும் மலையகத்துடனும் தொடர்புபடாத தமிழர்கள் கொழும்பு, கம்பஹா, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வசிக்கின்றனர். இவர்களை எவ்வாறு அடையாளப்படுத்துவது இவர்களுக்கான அரசியல் பாதுகாப்பினை எவ்வாறு உருவாக்குவது என்பவை தொடர்பிலும் விவாதங்கள் தேவை.

பல்வேறு விவாதங்களும் விமர்சனங்களும் இந்நூலில் இருந்தாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய நோக்கிலும் சமூகவியல் நோக்கிலும் விவகாரங்களை பார்ப்பவர்கள் கட்டாயம் இந்நூலை வாசிக்க

சி.அ.யோதிலிங்கம்





சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு 21.06.2015 (ஞாயிற்றுக் கிழமை) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் யோகா நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த 5000 இற்கும் அதிகமான மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டத்தினதும், வன்னிப் பிரதேசத்தின தும் முன்னோடி கவிஞராகிய வன்னியூர்க் கவிராய ருக்கு அவருடைய சொந்த ஊராகிய செட்டிகுளம் இலுப் பைக்குளத்தில் கடந்த சனிக்கிழமை (20.06. 2015) அன்று சிலை நிறுவப்பட்டது.




நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ். சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள வட மாகாண கல்வியமைச்சு மற்றும் யாழ் வலயக் கல்விப் பணிமனைக்கு முன்னால் 22.06.2015 வன் னியைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் கவனயீர்ப்பு போராட் டத்தை நடத்தினர்.



திருக்கோணமலை மூதூர், கிளிவெட்டி தங்கநகர் விளையாட்டுக் கழகத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விளையாட்டு பிரி வின் ஊடாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.



பாலத்தடிச் சேனை பாலர் பாடசாலை சிரமதானம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த விஜயபாகு தலை மையில் 22.06.2015 இடம்பெற்றது.

## வாசகர்களே..

வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்

அனுப்பவேண்டிய முகவரி:
"இது நம் தேசம்" இல. 43,
3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.




பெண் தலைமைத்துவ வாழ்வாதாரத்தை உயர்த்து வதற்கு ஏ-9 பிரதான வீதி மாங்குளத்தில் பயணிகள் ஓய்வகம்.

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 24.06.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.